386.

ஸுபாநு ஸூ
சித்திரை - வைகாசி மீ

ஸம்புடம் - 2
ஸஞ்சிகை - 5

ஸ்ரீ:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபில மடம் பத்ரிகை]

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
12 JUN 1943
MADRAS

ஸம்பாதகர்: வங்கீபுரம் ஸ்ரீ. வாஸுதேவாசார்யர்

: பிரசுரிக்குமிடம் :

5, ராமஸ்வாமி தெரு, தியாகராயநகர்,

மதராஸ்

May, 1943
Vol. 2, No. 5

5L
இ22னை211,N41
N43.2.5
N43 2.5
அ8113

ஸ்ரீ:

விஷய ஸூசிகை

		பக்கம்
1.	ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்	170
2.	வனஜாவின் வாழ்வு	176
3.	ஸ்ரீ அஹோபில மடத்துக் கதைகள்	182
4.	ஸ்ரீ. உப. வே. திருக்கோட்டியூர் ஸ்வாமி	187
5.	செய்திகள்	205
6.	ஸம்பாதகரின் குறிப்புக்கள்	206
7.	கடோபநிஷத்	73

ஸ்ரீ:

மதிப்புரை

"ஸித்தாந்த த்ரய ப்ரஹ்மஸூத்ராதி கரணார்த்த ஸங்க்ரஹம்" என்னும் பெயருடன் கூடிய க்ரந்தமொன்றை நாம் வரப்பெற்றோம். இதில், த்வைதம் அத்வைதம் விஶிஷ்டாத்வைதம் என்னும் மூன்று மதங்களின் ஆசார்யர்களால் அநுக்ரஹிக்கப் பட்டுள்ள ஸூத்ர பாஷ்யங்களின் தாத்பர்யம் ஸங்க்ரஹிக்கப் பட்டு ஸம்ஸ்க்ருத ஶ்லோகரூபமாக எழுதப்பட்டிருக்கிறது. மத த்ரய நிரூபகரென்னும் பிருது பெற்றிருக்கும் காளி வங்கீபுரம் வித்வாந் ஸ்ரீ. உப. ரங்காசார்ய ஸ்வாமி என்னும் மஹாவித்வாந் இதன் கர்த்தா. இவர் புதுக்கோட்டை ஸம்ஸ்தாநத்தில் 'தாநாதிகாரி' என்னும் உந்நத பதவியை வஹிப்பவர். அத்யாத்ம ஶாஸ்த்ரத்தைக் கசடறக் கற்றவர்; இம்மாதிரியான க்ரந்தமொன்றை இயற்றுவதற்குப் பூர்ணஶக்தி வாய்ந்தவர். வேதாந்திகளெல்லாராலும் இவர் இயற்றிய இந்த க்ரந்தம் மிகவும் கொண்டாடத்தக்கதே. இதன் க்ரயம் ரூ. 1–8–0 "ஸ்ரீ வி. ஸ்ரீநிவாஸன் அம்பாள்புரம், புதுக்கோட்டை" என்னும் விலாஸத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

OFFICE OF THE ... 12 JU ... MADR...

ஸ்ரீ:

ஸ்ரீமதே ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

ஸம்புடம் 2	ஸுபாநு ௵ சித்திரை - வைகாசி ௴	ஸஞ்சிகை 5

"அஹோபிலே காருடசைலமத்யே
க்ருபாவசாத் கல்பிதஸந்நிதாநம் |
லக்ஷ்ம்யா ஸமாலிங்கிதவாமபாகம்
லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ||"

240113

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

[ஸ்ரீ அஹோபிலமடம் பத்ரிகை]

ஸ்ரீ அழகியசிங்கரின் ஆசாஸந அநுசாஸநங்கள்

ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியா ஸ்ரீமந்ந்ருஸிம்ஹகருணோதிதா |
ஸ்ரீந்ருஸிம்ஹகடாக்ஷேண ஜீயாதாசந்த்ரதாரகம் ||
ந்ருஸிம்ஹபதபக்தாநாம் கேஹே கேஹே ஸதா வஸேத் |
ஸ்ரீந்ருஸிம்ஹப்ரியாஹ்யேஷா ந்ருஸிம்ஹப்ரியயா ஸஹ ||

[ஸ்ரீ ந்ருஸிம்ஹனுடைய கருணையால் உண்டாகி இருக்கும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, அந்த ந்ருஸிம்ஹனுடைய கடாக்ஷத்தாலும் ஸங்கல்பத்தாலும் சந்த்ரன் நக்ஷத்ரங்க ளுள்ளவரையில் அவை போலவே சிறப்புடன் வாழக் கடவது.

நம் ந்ருஸிம்ஹ பக்தகோடிகளின் க்ருஹங்கள்தோறும் இந்த "ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா" என்னும் பத்ரிகை, ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியையாகிற மஹா லக்ஷ்மியுடன் நித்யமாய் வஸிக்கக்கடவது.]

ஸ்ரீ:

ஶ்ரீமதே நிகமாந்த மஹாதேஶிகாய நம:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

[ஸ்ரீ உப. அன்பில் வி. கோபாலாசார்யர், அட்வோகேட், திரிசிராப்பள்ளி]

[3-ம் அங்கம்]

இந்த நாடகம் அத்யாத்ம நாடகம்; சாரீர நாடகம்; 'ஸம்ஸ்ருதி ஶர்வரீ' என்னும் ஸம்ஸார ராத்ரியில் ஆடி ஸூர்யோதயத்தில் முடியும் நாடகம். மற்ற நாடகங்களில் ஸந்திகளைப்போல் இங்கும் அமைப்பதுடன், சாரீரகத்தின் க்ரமத்தையும் இங்கே அநுஸரிக்கிறார். பகவானுடைய மோக்ஷண ஸங்கல்ப ஸூர்யோதயத்தால் ஸம்ஸார ராத்ரி தொலைந்து ஜீவன் மோக்ஷ பலம் பெறுவது இந்நாடகத்தின் ப்ரயோஜநம். 'யஸ்ஸித்திர்பூர்வ யாதஸ்ஸுமே நிர்மிதே' என்னும் முதல் ஸ்லோகத்திலேயே ஸ்ரீமானை நாராயணன் விஷயமான பக்திப் பெருக்கால் அமைந்த முக்தைஸ்வர்ய ப்ரபாத ஸமயத்தில் பகவத் ஸங்கல்ப ஸூர்யோதயம் தர்சந விஷயமாகு மென்று கூறப்பட்டது. ப்ரபோத சந்த்ரோதயத்திலும், இந்நாடகத்திலும், விஷ்ணு பக்தி முக்யமான பாத்ரம்; அவளால்தான் மோக்ஷத்தின் வடனை ஸித்திப்பது. 'விஷ்ணு பக்தியின் ப்ரஸாதத்தால்தான் ஜீவனுக்கு மோக்ஷம் கிடைத்தது' என்று ஜீவன் விஷ்ணுபக்தி யென்னும் பாத்ரத்தை மெச்சி அவன் திருவடிகளில் ப்ரணமம் செய்வதோடு சந்த்ரோதய நாடகத்தின் முடிவு.

'தேவ்யா விஷ்ணுபக்தே: பூர்வார்தாஸ் ஸித்தாந் உபாஸ்மஹே'

என்று சொல்லிக்கொண்டு புருஷன் (ஜீவன்) அவன் திருவடிகளில் விழுகிறான்; 5, 6 - அங்கங்களில், அங்கே விஷ்ணு பக்தி பாத்ரமாக வருகிறாள். இரண்டாம் அங்கத்திலேயே சார்வாகன் (நாஸ்திக வாதி) மஹா மோஹரிடம், 'விஷ்ணு பக்தி என்கிற ஒரு மஹா ப்ரபாவமுள்ள யோகினீ (ஸித்தி தேவதை) இருக்கிறாள்; அவளால் அநுக்ரஹிக்கப்பட்ட வம்சத்தாரை நாம் கண்ணெடுத்துக்கூடப் பார்க்க முடியாது. ஆகையால் நீர் ரொம்பவும் ஜாக்ரதையா யிருக்கவேண்டும்' என்கிறான். ப்ரபோத சந்த்ரோதய கர்த்தாவான ஸ்ரீ கிருஷ்ண மிஸ்ரரை, 'ஶுக வாமதேவாதிகளைப் போல ஜீவன் முக்தர்' என்று அத்வைத க்ரந்தங்கள் கூறும். மிஸ்ரர் என்பது 'ஷட்தர்சந பாரத்ருஸ்வாவை'ச் சொல்லு மென்பர். ஷட்தர்சந வாசஸ்பதியை ஸ்வாமி 'மிஸ்ரர்' என்று வ்யவஹரிப்பதுண்டு. சந்த்ரோதயத்தில்போல இந்நாடகத்திலும் முடிவில் விவேகர், 'அம்மா! மஹா யோகேஸ்வரி! உன் ஸம்பந்த மற்ற விஜ்ஞாந தபோ தாந யஜ்ஞாதிகளால் என்ன பயன்? ப்ரஹ்மத்தை அநந்யமாகப் பற்றிய உன்னாலேதான் ப்ரஹ்

மத்தை உள்ளபடி அறியவும் காணவும் புகுரவும் கூடும்' என்று பேசின தும் விஷ்ணு பக்தி, 'பகவானுடைய தயா ஸங்கல்பத்தால் பலம் கிடைத் தது' என்கிருள். 'நாஹம் வேதைர் ந தபஸா', 'பக்த்யா த்வநந்யயா ஶக்ய:' என்கிற கீதா காநத்தை ஸ்வாமி அநுஸரிக்கிருர். 'அஹோ வ்யாஹாரமாதுரீ' என்று சந்த்ரோதயத்தில் சார்வாகனும் வியந்து புகழ்ந்ததை 'அஹோ மேதஸ்விநீ' என்பதால் ஸ்வாமி வ்யஞ்ஜநம் செய்யும் அழகு ரஸிக்கத்தக்கது. இரண்டாம் அங்கம் முதல் கடைசியான ஆருவது அங்கம் வரையிலும், நாடகத்தின் உபஸம்ஹாரத்திலும், விஷ்ணு பக்தியின் ப்ராதாந்யத்தைக் காட்டினதற்கு இணங்கும்படி நாடகத் தொடக்கத்தில் விஷ்ணுபக்தியைக் குறிக்கவில்லையென்ற குறையை இங்கே ஸ்வாமி 'யத்பக்திபூர்வம்' என்று உபக்ரமத்திலேயே காட்டி, உபஸம்ஹா ரத்திலும் குறித்து உபரக்மோபஸம்ஹாரங்களின் ஒற்றுமை ரஸத்தை விளக்குகிருர். 'விஷ்ணு பக்தியின் ப்ரஸாதத்தால் (அநுக்ரஹத்தால்) மோக்ஷத்தின் ஸித்தி' என்று சந்த்ரோதயம். 'விஷ்ணு பக்தியில் உதித்த விஷ்ணு ப்ரஸாதத்தால் ஸங்கல்பத்தால் மோக்ஷ ஸித்தி' யென்று ஸூர்யோதயம். சாரீரக ஸூத்ர சாஸ்த்ரத்தில் இரண்டாவது அத்யா யத்தின் இரண்டாம் பாதத்தில் பரமத ப்ரதிக்ஷேபம் நடந்தது. சந்த் ரோதயத்தில் 3-ம் அங்கத்தில் பர மதஸ்தர்கள் கூத்தாட்டம் நடக்கிறது. சாரீரகத்தில்போல் இங்கே இரண்டாம் அங்கத்தில் அக்கூத்து.

"ஸமஸ்த ஜிகீஷாஹேதோர் ஸ்தத்ஸிஷாதநாடகை: |
உபஸ்தாபஸ்ய தக்ஷஸ்ய ஶாஸ்த்ரயோகாய ஶுத்தயே ||"

என்று ந்யாய ஸித்தாஞ்ஜநத் தொடக்கம். முதல் அங்கத்தின் முடிவில் 'ஸிவாகரணவிஜிகீஷாஸிதாமேஶ:' 'யதிமணவஹாவோநந்யம் யத்ந ஸம் தாநவ்ரக்ஷு' என்று பிந்துவையும் ப்ரயத்நத்தையும் சேர்த்து ஸூசநம் செய்யப்பட்டது.

"அஹம் த்வாரம்பே ஸ்யஹிநு அபிவாதயா ஸந்த்ரதயர்தி: |"

என்று விவேக மஹாராஜர் முதல் அங்கத்தில் ஆரம்பத்திலேயே 'ஆரம் பம்' என்பதைக் குறிக்கிருர். ஆரம்பத்தில் 'ஆரம்பத்தையும்' கதா பீஜத்தையும் குறித்து, அவ்விரண்டின் சேர்த்தியான முகஸந்தியை ஸூசிக்கிருர். 'ஜிநநோவே' என்று முதல் ஶ்லோகத்திலேயே முதல் அங்கத்தில் முகஸந்தி அமைவதை ஸூசிக்கிருர். 'நான் பரமாத்மாவின் அநுக்ரஹ வ்ரதத்தைத் தேடி ஸம்பாதிக்கவேணும்' என்று விவேகர் தம் முடைய யத்நத்தைப் பேசுகிருர். நாடக ப்ரஸ்தாவனையில் ஸூத்ரகாரர் 'விவேகப்ராரம்பத்திலும் ப்ரதிபக்ஷ மதங்களைப் பங்கம்செய்யும் ப்ரயத்நத் திலும், மோக்ஷத்தில் ஆசை விதிப்பதிலும், பகவத் விஷயமான பக்தி யோகத்திலும், அதன் கார்யமான மோக்ஷத்திலும், இந்நாடகத்தில் புத்தி மான்கள் முகம், ப்ரதிமுகம், கர்ப்பம், விமர்ஶம், பல நிர்வஹணம், என்

கிற ஐந்து ஸந்திகளேயும் கவனித்துப் பார்த்துக்கொள்ள வேணும்' என்கிருர். பரபக்ஷ ப்ரதிக்ஷேபமான இரண்டாம் அங்கமும் யத்நத்தில் சேர்ந்ததென்று திருவுள்ளம்போலும். முதல் அங்க முடிவில் 'பிந்து' 'யத்நம்' என்று இரண்டின் சேர்க்கையான ப்ரதிமுக ஸந்தியை ஸூசிக்கிருர். அதில் 'விலாஸம்' என்பது முதல் ஹாவம். உத்திஷ்ட ப்ரயோஜந விஷய மான ஆசை விலாஸ மென்பர். 'ரிவாமணவிஜிமீஷா' என்பது ப்ரதிமுக ஸந்தியில் விலாஸத்தைக் காட்டும். இரண்டாம் அங்கத்தில் நம் தர்சந தீர்த்தகரர் ப்ரஸ்தாவம் விஸ்தாரமாக உள்ளது.

'ஷிக்ஷளயாவஜெஜெதுயுஜவடி'

என்று தர்சந விஜய பதாகையும் ஸூசிக்கப்பட்டது. ஆசிரியர் ஸஹாயத்தால்தான் மோக்ஷ ப்ரயோஜநம் ஸித்திக்கும். 'பதாகை' என்றும் 'ப்ரகரீ' என்றும் நாடகங்களில் முக்ய ஸஹாயம் செய்பவர் வ்ருத்தாந்தத்தையும், கொஞ்சம் ஸஹாயம் செய்பவர் வ்ருத்தாந்தத்தையும் சொல்லுவர். ராமாயணத்தில் ஸீதாந்வேஷணுதிகளில் உபகரித்த மஹாராஜர் வ்ருத்தாந்தத்தைப் 'பதாகை' யென்றும், ஜடாயு சபரி முதலியவர் வ்ருத்தாந்தங்களே 'ப்ரகரீ' என்றும் சொல்லுவர். 'ப்ரகரம்' என்பது ஸஹாயம். 'கஓவுகஈ: வுகஶீ' என்பர். இங்கே பகவான் தயாபாத்ராந்வேஷணம் செய்கையில், யதிராஜர் முதலிய ஆசிரியர் நம்மைத் தேடிப் பிடித்துப் பகவான் மீட்டுக்கொள்ளும் விஷயத்தில் உபகரிக்கிருர். நாம் பகவானே 'வொ஽வெஷவு:' என்ற க்ரமத்தில் தேடுவதிலும் நமக்கு உபகரிக்கிருர்கள். இருதலேக்கும் உபகாரம் புரிபவர்.

இரண்டாவது அங்கத்தின் முடிவில் 'மோஹருடைய அஸுரபடர்களான ராகனும் த்வேஷனும், விஷ்ணு பக்தியையும் விரக்தியையும் சிறையிடப் பார்க்கிருர்கள்' என்று திரைக்குள்ளிருந்து சப்தம் கிளம்புகிறது. அப்போது விவேகர் 'இதென்ன விந்தை! சாந்தி கர்மத்தில் பேதாளம். கிளம்புகிறதே! எதிரி ஸைந்யத்தை நிர்மூலநம் செய்ய இதோ யத்நம் செய்வோம்' என்று கூறுகிருர். அத்துடன் இரண்டாம் அங்கம் முடிந்தது. அங்கும் 'யத்ந'ப் பேச்சால் ப்ரதிமுக ஸந்தியின் ஸூசநம். நம் ஶ்ரத்தையைக் கலக்கிவிடும் புறச் சமயங்கள் அகன்றதும், உள் சத்ருக்களான ராகன் த்வேஷன் காமன் க்ரோதன் டம்பன் அஹங்காரன் முதலியவர்களே அடக்க யத்நம் நடக்கிறது. 'வுவூாத நெதுரவஙிதழு' என்று நாடக வஸ்து லக்ஷணத்தில் 'நெதா' என்பது நாயகநாயகிகளேயும் ப்ரதி நாயக ப்ரதி நாயகிகளேயும் குறிக்கிறது. சந்த்ரோதயத்தில் விவேகருக்கு 'மதி' பத்நீ. இங்கே 'ஸுமதி' பத்நீ. இரண்டு நாடகங்களிலும் மஹா மோஹர் ப்ரதிநாயகர். சந்த்ரோதயத்தில் 'மித்யாத்ருஷ்டி' அவர் பத்நீ. இங்கே 'துர்மதி'. அங்கே மஹாமோஹர் இரண்டாம் அங்கத்திலே வருகிருர். இங்கே முன்பு அவர் படர்களும் பிறகு ஐந்தாம் அங்கத்தில்

அவரும் வருகிறார்கள். அங்கே ராகன் த்வேஷன் என்கிற பாத்ரங்கள் இல்லை. அங்கே ஐந்தாம் அங்கத்தில் 'மனம்' என்னும் பாத்ரம்.

"ஹா ஹா கஷ்டாரகா: ராகத்வேஷப்ரம்ருதய:"

என்று அழுகிறார். கீதையின் இரண்டாவது அத்யாயத்தில் பகவான்

"இந்த்ரியஸ்யேந்த்ரியஸ்யார்த்தே ராகத்வேஷௌ வ்யவஸ்திதௌ ।
தயோர்ந வசமாகச்சேத் தௌ ஹ்யஸ்ய பரிபந்திநௌ ॥"

என்று ராக த்வேஷங்களைப் பெரிய கொள்ளைக்காரர்களாகக் கூறினார். கீதையை அநுஸரித்து இங்கே ஆந்தர சத்ருக்களில் முக்யர்களாக அவ்விருவரும் பாத்ரங்களாக அமைக்கப்படுகிறார்கள். முதல் அங்கத்தின் நடுவில்:

"சுபவதேசிகத்ருஷ்டிஸுதாப்லவே
விபிவசாத்பவமேத்யபி தேஹிந: ।
விஜ்ருதோயகா விபிதாமகா:
பரிணமந்த்யபவர்கபலாங்குரா: ॥"

என்ற ஸ்லோகத்தில் மோக்ஷதசை யென்னும் ப்ராப்ய பலத்தின் முளைகள் ஆசார்யர் சுப கடாக்ஷாம்ருத ஜலம் பாய்வதால் கிளம்பி இன்பந் தருமென்று கூறியதால் 'பிந்து, யத்நம்' இவ்விரண்டின் சேர்த்தியான 'ப்ரதிமுக' ஸந்தி ஆசார்யர் கடாக்ஷத்தாலும் யத்நத்தாலும் அமையுமென்று ஸூசிக்கப்பட்டது. ஆசார்ய வ்ருத்தாந்த விஸ்தரமான இரண்டாவது அங்கத்தில் அதன் விஸ்தாரம் வருவதை முதல் அங்கத்தின் முடிவில் 'பிந்துவையும்' 'யத்ந ஸந்தாநத்தையும்' சேர்த்துப் பாடி ஸூசித்தார். 'யதிபதிஸஹஸ்ராம்சு' என்று அந்த ஸ்லோகத்தில் வரப்போகும் யதிராஜ வ்ருத்தாந்தத்தையும் ஸூசித்தார். 'குரு சரணத்தை விட்டால், இந்த்ரியங்களை அடக்க வேறு கதியில்லை' என்று ஸ்ருதி கீதை பாடிற்று. அதை அநுஸரித்து,

'தாந்தா தேநாந்த்ரியாணீ யதீச்வரஸம்ச்ரயா: ।'

என்று ஸ்வாமி பாடியது. இரண்டாம் அங்கத்தில் யதீஸ்வர் ஸம்ஸ்ரயத்தைக் காட்டிவிட்டு, இங்கே இந்த்ரிய ஜயத்திற்காகக் கொள்ளைக்காரரான ராக த்வேஷங்களை ப்ரவேசிக்கச் செய்து, அவர்களை ஜயிக்கும் யத்நத்தை விளக்குகிறார். 'பிந்து' என்பது முளை; அங்குரம்; முளை தெரிந்தும் தெரியாததாயிருந்தது. கிளம்புவது ப்ரதிமுகம். ஆரம்பத்திற்கும் கார்ய ஸித்திக்கும் நடுவில் 'பதாகைகளையும் ப்ரகரிகளையும்' (அதாவது: ஸஹாய வ்ருத்தாந்தங்களை) வேண்டியபடி நடுவில் எங்கும் அமைக்கலாமென்பர். திவ்ய க்ஷேத்ரங்களின் வ்ருத்தாந்தமும் அவதாரங்களின் வ்ருத்தாந்தமும் ஸஹாயங்களில் சேரும். 6, 7 - அங்கங்களில் அந்த ப்ரஸ்தாவம்.

‘லக்ஷ்யாலக்ஷ்ய பீஜஸ்ய வ்யக்தி: ப்ரதிமுகம் மதம் |’

என்று ப்ரதிமுக லக்ஷணம். விதை முளையாகி வெளியிலே கிளம்பி ப்ரகாச மாவது. ஜீவனுடைய மோக்ஷத்தை வர்ணிக்கையில், ஆசிரியர் வ்ருத்தாந்தத்தை விஸ்தாரமாகப் பேசுவது கதையில் விச்சேதம் போல் தோன்றும். அதில்லாமல் இந்த்ரிய ஜயமும் மோக்ஷபலமும் கைகூடா என்பதை விளக்கத் தொடர்ச்சியைக் காட்டுவது ‘பிந்து’ என்பர். ‘நிர்வஹணவிஜிகீஷாவிதுரோ வ:’ என்பதால், ஆசார்யர் ஸஹாய மன்றியில் கார்யம் கைகூடாதாகையால், அவர்கள் ப்ரபாவ பர்ஹணத்தால் ஜீவ மோக்ஷ கதா விச்சேதமில்லையென்பது வ்யஞ்ஜநம் செய்யப்பட்டது. கிளம்பும் மோக்ஷ முளையை அழித்துவிடும் ராக த்வேஷப் பூச்சிகள் இங்கே மூன்றும் அங்கத்தில் பாத்ரங்களாக ப்ரவேசிக்கிறார்கள். ப்ரஹ்ம ஸூத்ரத்தில் புறச் சமயங்களை ஶமநம் செய்யுமிடத்தில், நிரீஸ்வர மீமாம்ஸகரோடு வாதம் செய்யவில்லை. மீமாம்ஸை வேதத்தின் பொருளை விளக்குவது. வேதவாதம். அதிலிருந்து நிரீஸ்வர மீமாம்ஸகர் கிளப்பும் மோக்ஷ மார்க்காக்ஷேபங்களை ஸாதநாத்யாயத்தின் கடைசி பாதத்தில் ஸூத்ரகாரர் நிரஸிக்கிறார். வேதப் பொருளென்று சொல்லி வேதாவலம்பிகளாகப் பேசுகிறவர்களை ஸதஸ்ஸில் நிரஸிக்காமல் ஏகாந்தத்தில் சிக்ஷிக்கவேண்டு மென்று ஸூத்ரகாரர் திருவுள்ளம் போலும். பூர்வ மீமாம்ஸை உடல் என்றும், உத்தர மீமாம்ஸை சிரஸ் என்றும் வ்யவஹரிப்பர். இரண்டும் சேர்ந்து ஓர் முழு மீமாம்ஸா சரீரமாய் அமையும். தலையில்லாத உடல் ‘கபந்தம்’; உடலில்லாத தலை ராஹு; தலையைத் தள்ளி உடலை மட்டும்பற்றியவர் கபந்த மீமாம்ஸகர்; உடலைத் தள்ளி வெறுந் தலையைப் பற்றுபவர் ராஹு மீமாம்ஸகர். ராமாயணத்தில் கபந்தன் பெருமாள் தர்சநம் பெற்றும் அவரால் ஸம்ஸ்கரிக்கப் பெற்றும், ஸ்வர்க்கத்தையே விரும்பிப் பெருமாள் திருவடி பதத்தை யிழந்தான். அக்கபந்தன் வைதிகனுயினும் கபந்த மீமாம்ஸகன்: ஸ்வர்க்கத்தோடு நின்றுவிட்டவன். ‘கதம் ஸஹதி ஶீர்ஷா கபந்தபாவாய யத்யதே’ என்று இரண்டாம் அங்கத்தின் முடிவில் கேட்கப்பட்டது. ‘மீமாம்ஸை யென்னும் ரஸிகப் பெண் எப்படி ஸபையில் தலையில்லாக் கபந்தத்தை விரும்பி நெருங்குவாள்?’ என்று ரஸம். உடலில்லாத வெறுந் தலையையும் அணுகமாட்டா ளென்றும் வ்யஞ்ஜநம். முழு உடம்பல்லாத வெறுந்தலையையோ, வெறும் உடலையோ ஒரு பெண் வரிக்கமாட்டாள். புறச் சமயங்களை இரண்டாம் அங்கத்தில் அகற்றியதும், ராகன் முதலிய மோஹ வீரர்கள்கூடிய ஜீவனுக்கு வேதத்தில் ஶ்ரத்தை வந்துவிட்டது. வேதத்தைத் தள்ளென்றால் கேட்கமாட்டாள். வேதமே ஸ்வர்க்கத்தைத் தான் நிஶ்ரேயஸம் (எல்லாவற்றுக்கும் உயர்ந்த ஶ்ரேயஸ்) என்றோதுகிறது. ஸ்வர்க்க மென்னும் அம்ருதத்வத்தைக் காட்டிலும் ராகாதிகள் ஒழிந்த சுஷ்க நீரஸ தசையான மோக்ஷமென்று வேதத்தில் பேச்சுக் காண்பதெல்லாம் கருத்தில்லாத வெறும் பேச்சுகளென்று ஜீவனுக்கு

உபதேசித்து மயக்கி, 'மோக்ஷத்தில் நோக்கில்லாமற் செய்வோம்' என்று பார்க்கிறார்கள். பகவானும் கீதையில் நிரீஶ்வர மீமாம்ஸகரை 'வேதவாதரதா: பார்த² நாந்யத³ஸ்தீதி வாதி³ந:| காமாத்மாந: ஸ்வர்க³பரா:' என்று நிந்தித்தார். இங்கே ராகாதிகள் வேதவாதம் செய்து ஸ்வர்க்கத்தையே நோக்கச் செய்ய ப்ரயத்நம் செய்கிறார்கள். இரண்டாம் அங்கத்தின் முடிவில் 'ராகம் த்வேஷ மென்று பெயர்பெற்ற மோஹ படர்களான அஸுரர்கள் விஷ்ணுபக்தியையும் விரக்தியையும் சிறையிட யத்நிக்கிறார்கள்' என்று மூன்றாம் அங்கத்தில் ராக த்வேஷர்கள் ப்ரவேசிப்பது ஸூசிக்கப்பட்டது. நாடகத்தில் ஒவ்வொரு கதாம்சத்தையும் நடித்துக் காட்ட முடியாது. அங்கங்களின் நடுவில், முன் அங்கத்திற்கும் பின் அங்கத்திற்கும் நடுவே நடந்த கதாம்சங்களை விஷ்கம்பகத்தால் இருவர் ஸம்பாஷணையால் கதையாகச் சொல்லுவர். இங்கே விஷ்கம்பகத்தில் ராகனும் த்வேஷனும் பேசிக்கொள்ளுகிறார்கள். இந்த அங்கத்திற்கு முக்த்யுபாயாரம்பம் என்று பெயர். ப்ரஹ்ம ஸூத்ரத்தின் மூன்றாவது அத்யாயத்திலுள்ள க்ரமம் இங்கே அநுஸரிக்கப்படுகிறது.

[தொடரும்]

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

OFFICE OF THE REG... 12 JUN 19.. MADRA

ஸுபாநு ௵ வைகாசி ௴

1௳ சனிக்கிழமை — சூந்ய திதி.

2௳ ஞாயிற்றுக்கிழமை — ஸர்வ ஏகாதசி (வ்ரதம்).

3௳ திங்கட்கிழமை — பெருமாள் கோயில் (காஞ்சீபுரம்) ஸ்ரீ தேப்பெருமாள் உத்ஸவாரம்பம்.

4௳ செவ்வாய்க்கிழமை — ஸ்ரீ ந்ருஸிம்ஹ ஜயந்தி.

5௳ புதன்கிழமை — நம்மாழ்வார் சாற்றுமறை (ஸ்ரீ தேப்பெருமாள் கருடஸேவை)

11௳ செவ்வாய்க்கிழமை — ஷஷ்டி ஸப்தமி திதி த்வயம்.

16௳ ஞாயிற்றுக்கிழமை — ஸ்ரீ வைஷ்ணவ ஏகாதசி.

19௳ புதன்கிழமை — அமாவாஸ்யை.

31௳ திங்கட்கிழமை — ஸர்வ ஏகாதசி : மிதுந ரவி : 57 - 58. வ்ருஷப ஶுக்ல ஏகாதஶி திதி.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

வனஜாவின் வாழ்வு

ஸ்ரீ. உப. வித்வான் S. T. ஸ்ரீநிவாஸாசார்யர் M.A., L.T.

ஹாஸ்டல் மாடியில் யோசித்தவண்ணம் உட்கார்ந்திருந்தாள் வனஜா. கடலினின்றும் எழுந்த குளிர்ந்த காற்று அவள் உடலெல்லாம் தவழ்ந்தது. கீழ்வானில் உதித்தெழுந்த சந்திரனின் கிரணங்கள் அக் கட்டிடத்தின்மேல் விழுந்து, இயல்பாகவே வெளுத்த அதனை வெள்ளி பூசியது போல் ஆக்கிற்று. நல்ல சிவந்த நிறம்; குறுகுறுத்த அகன்ற கண்கள்; கறுத்து, அதிக் கவனத்தால் மிகவும் பொலிவுற்ற கூந்தல். வனஜா ஓர் சிறந்த அழகியே. நாகரிகக் கல்வியின் எல்லையென்றே அவளைச் சொல்லலாம். வடமொழியில் எம். ஏ. பட்டதாரி. தமிழிலும் அங்ஙனமே. இப்பொழுது ஸர்வ கலாசாலையில் ஆராய்ச்சி இலாகாவில் உத்யோகம் பெற்றுச் சில மாதங்களே யாகிறது. இயல்பாக அழகிய அவள் முகம் பல வருஷங்களாகப் பரிக்ஷைகளுக்குப் படித்ததின் பயனாய்ச் சிறிது வாடியிருந்தது. வயது இருபத்திரண்டு இருக்கலாம். கோணல் வகிடும், நெற்றியில் ஊசலாடும் சுருண்ட குழற் கற்றைகளும், முன்புறம் தொங்கவிடப்பெற்றுத் துடைப் புறத்தே புரளும் நீண்ட ஒற்றைப் பின்னலும், கூந்தலில் தொங்கும் கனத்த நீலாம்பரப் பூங்கொத்தும், அழகிய வானவர்ணப் பட்டுச் சேலையும், வனஜாவை நவநாகரீக லக்ஷ்மியே உருவெடுத்தவளாக எடுத்துக் காட்டின.

"வனஜா! வனஜா!" இனிய குரலைக் கேட்டதும் வனஜா தலை நிமிர்ந்தாள். தன் தோழி காத்யாயனி (ஸம்ஸ்க்ருத ஹானர்ஸ் கடைசி வகுப்பைச் சார்ந்தவள்) தன்னை நோக்கிவரக் கண்டாள்.

"வனஜா! என்ன ப்ரமிச்சு உட்கார்ந்திருக்கு. கையிலே கடலாஸு வச்சிருக்கு. "விசிந்தயந்தீ யமநந்யமாநஸா தபோதநம் வேத்ஸி ந மாமுபஸ்திதம். அப்படியோ? மனஸ்ஸு எங்கே உண்டு?" என்று கேரள நாட்டின் இனிய ஸ்வர மாதுர்ய சுத்திகளுடன் பேசினாள். பக்கத்தில் ஓர் நாற்காலியில் உட்கார்ந்து கைப்பிடி கிராதியில் சாய்ந்தாள். வனஜா, "காத்யா! நீ இரண்டு தரம் கூவியது இப்பொழுது ஞாபகத்திற்கு வருகிறது. எனக்கு மறதி ஒன்றுமில்லை. இதற்காக நீ சாகுந்தள ஶ்லோகத்தையெல்லாம் ஒப்பிக்கவேண்டாம். சித்தி பெரும்பாக்கத்திலிருந்து கடிதம் போட்டிருக்கிறார். நாளை மகத்திற்கு இங்கே ஸ்நாநம் செய்ய வருகிறாராம். தான் ஹாஸ்டலுக்கு வர முடியாதாம். ஆகையால் என்னைத் 'தன்னுடன் வந்திருக்கும்படி' எழுதியிருக்கிறார். அவர் என்னைத் தாயினும் தாயாய் எடுத்து வளர்த்தவர். நாளைக் காலையிலேயே ஸ்நாந கட்டத்திற்கு வந்துவிடவேண்டுமாம். வைதிகர்கள்

போலக் காலையிலே அங்கே போய் நிற்க எனக்கு வெட்கமாயிருக்கிறது" என்றாள்.

"இருக்கட்டும். இத்தர காலம் உனக்கு ஸஹாயிச்சு ஒன்னே படிப்பிச்சவ ளில்லேயா? போகத்தான் வேணம்" என்றாள் காத்யாயனி. டணார் டணார் என்று மணியடித்தது. "ஸகிண்ட் பாட்ச் பெல் இல்லோ இது வனஜா! நான் சாப்பாட்டுக்குப் போகிறேன். நீ வரவில்லையா?" "கொஞ்ச நேரங் கழித்து வருகிறேனென்று கௌரி அம்மாளிடம் (சமையற்காரி) சொல்லியிருக்கிறேன். நீ போய்வா" என்றாள். மனம் யோசனையில் ஆழ்ந்தது. தடார் தடார் என்று படிக்கட்டுகள் வழியாய்க் காத்யாயனி இறங்கும் சத்தம் கேட்டது.

* * * *

அதி நாகரீக வாழ்வில் இருந்த வனஜாவுக்கு ஸமுத்ர ஸ்நாநமும் ஸ்வாமி தர்சநங்களும் விநோதமா யிருந்தாலும், பல ஜனங்களிடைக் கடற்கரையில் பொழுது போக்குவது சிறிது உற்சாகமாகவே இருந்தது. சித்தியான ஜானகி அம்மாளுடன் இன்பமாகவே பொழுது போக்கினாள். சித்தியின் கோயில் வர்ணனைகளும் உத்ஸவ வைபவங்களும் முற்றிலும் அவளைக் களிப்பிக்காவிடினும், அவள் மீதுள்ள அன்பினால் எல்லாவற்றையும் கேட்டாள். அவளுக்காகவே திருவல்லிக்கேணியில் ஓர் வைதிக குடும்பத்திலும் பொழுதுபோக்கி ஒருநாள் இருந்துவிட்டாள். இரவு பத்து மணிக்கு ஸ்ரீ பார்த்தஸாரதிப் பெருமாள் கடற்கரையிலிருந்து கோயிலுக்குத் திரும்பும் ஸமயமாகச் சொல்லப்பட்டது. 9-மணி ஸமயத்திற்குக் கூட்டமேயில்லை. ஜனங்கள் சற்றுத் தூரத்தில் விலகிக் கூட்டம் கூட்டமாய்ப் படுத்தும் உட்கார்ந்தும் இருந்தனர். பெருமாள் தங்கியிருந்த கூரை மண்டபத்தில் யாருமில்லை. நிறைமதியினது அம்ருதமயமான கிரணங்கள் அவ்வெம்பெருமானின் நீலமா முகில்போன்ற திருமேனியில் அம்ருத வர்ஷம் செய்வதுபோல் பொழிந்துகொண்டிருந்தன. எதிரில் ஓர் வெள்ளி விளக்கு மங்கலாய் எரிந்துகொண்டிருந்தது. பெருமாளுக்கு அருகில் ஓர் அர்ச்சகர் உட்கார்ந்திருந்தார். ஜானகியம்மாளும் வனஜாவும் அங்கு நின்றனர். வனஜா ஸ்ரீ பார்த்தஸாரதியை முதன் முதல் அன்றே நெருங்கிக் கண்டாள். துலங்கு நீண்முடியும், வச்சிரச் சுடர்விடும் பதக்கங்களும், அஞ்சலென்று அருள் செய்யுந் திவ்ய ஹஸ்தமும், அரையிற் சாத்திய பீதகவாடையும், கைக்கொண்ட கதையும், கஞ்ச மலர்த் திருவடியுங் கண்ட அவள் மனம் ஓர் இன்பக் கடலில் மூழ்கியது போல் தோன்றிற்று. தன் வாழ்க்கையில் இதுகாறும் காணாத ஓர் இன்ப நிறைவைக் கண்டதுபோல் உணர்ந்தாள். பரந்த மாசிலா நீல வானம். அதில் தங்கக் குடம்போல் நிறைந்தெழுந்த நிறைமதி. கீழே ஆர்த்து ஓங்கி அலைமோதும் நீலக்கடல். எதிரில் நீலமாமுகில் வண்ணன். இலக்கிய அறிவுடைய இப்பெண்மணி ஆழ்வார்களைக் கலக்கிய இவ்வடிவழகின் வன்மையை இன்று கண்டாள். பெருமூச் செறிந்தாள்.

ஸ்ரீ பார்த்தஸகாவின் நீலத் திருமேனி, 'கடலோ காயாவோ கருவிளை யோ கார்முகிலோ' என்று பெரியார் பட்ட ஐயம் பொருந்துமென்று தேறினுள். "மையோ மரகதமோ மறிகடலோ மழைமுகிலோ ஐயோ இவன்வடிவம்" என்றன்றோ கம்பன் ஏங்கியது என்று நினைத்தாள்.

* * * *

ஹாஸ்டல் தோட்டத்தில் காத்யாயனியும் வனஜாவும் ஓர் ஸ்படிக மேடையில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தனர். "நம் பூர்விகர்கள் நிபுணரான சில்பிகள் என்று உனக்குச் சொல்லவேணுமா? விக்ரஹங்கள் அழகா யிருந்துவிட்டால் நம் மனத்தை என்ன செய்யவேண்டும்? க்ரீஸ் நாட்டில் அத்யத்புதமான விக்ரஹங்கள் உண்டு. நம் நாட்டிலும் பல அழகிய வடிவங்களைச் சித்ர ரூபமாகவும் சிலா ரூபமாகவும் பார்க்கிறோம். உன் மனம் ஏனே கலங்கிவிட்டது? இன்று காலைக் காப்பி, ப்ளேட்டில் சாப்பிடாமல் பாத்திரங்களில் ஊற்றிச் சாப்பிட்டாய். இருக்கட்டும். அவரவர் மனப் போக்கு. உன் தன்மையே மாறிவிட்டது போலன்றோ தோன்றுகிறது?" என்றுள் காத்யாயனி.

"ஆம் காத்யாயனி! நேற்றுக் கடற்கரைக்குப் பூர்ண கர்ப்பிணி களும் சிறுவர்களும் குழந்தைகளும் வந்து, இந்தக் குளிரிலும் ஜனச் சந் தடியிலும் ஸ்நாநம் செய்துவிட்டுப் போகும்பொழுது, அவர்கள் முகத்தில் உள்ள அன்பையும் நம்பிக்கையும் நீ காணவேண்டுமே. நான் ஏதோ ஓர் தவப்பயனை இதுகாறும் இழந்துவிட்டது போல் நினைக்கிறேன். அந்தத் தெய்வத்தின் முகம் உண்டே காத்யா! நம் போஜ சம்புவில் விஷ்ணு வர்ணநமான ஸ்லோகம் ஞாபகமிருக்கிறதா?" என்று வனஜா கேட்டாள்.

காத்யா—"ஓ! 'ஸந்தாபக்நம் ஸகல ஜகதாம் சார்ங்க சாபாபி ராமம், லக்ஷ்மீ வித்யுல்லஸித மதவீகுச்சஸச்சாயகாயம்' என்பதுதானே."

வனஜா—"ஆம் காத்யா! அந்த ஸ்லோகமே அப்பெருமானைக் கண்டதும் ஞாபகத்திற்கு வந்தது. காத்யா! நீ ரூமில் சில தடவை பாடுவாயே; அந்தப் பாட்டைப் பாடு."

காத்யா—"ஓ! பெரிய யோகியாய் விட்டாயே. 'மறக்கேண்ட மைவண்ண! நின் மலரடி ஞான் வாழ்த்தி' இதுதானே!" என்று இனிமை யாய்ப் பாடுகிறுள். கண்ணீர் போராடும் கண்களுடன் வனஜா கேட் கிறுள்.

காத்யா—நல்ல பைத்யமிது! என் பாட்டி இந்தப் பாட்டைப் பாடச் சொல்லி உயிரை வாங்குவள். 'நீலாம்போதி தரங்கசாயி' எனும் பொழுது உன் தலை ஆடிய ஆட்டம் என்ன சொல்வேன்! நல்ல பைத்யம். வா இன்று; ம்யூஸியத்தில் உனக்கு எத்தனை புத்தர்கள், ஜினர்கள், நட ராஜர்கள், விஷ்ணுக்கள் காட்டுகிறேன். ஏதோ நம்புகிறவர்கள் நம் பட்டும். மெத்தப் படித்த உன்னையுமா இப்பிரதிமைகள் கலக்கும்?" என்றுள் காத்யாயனி.

வனஜா அறைக்குச் சென்றாள். டாய்லட் டேபிளின் சிறு ட்ராயரைத் திறந்து, அதில் சில துளஸீ தளங்களேயும் மஞ்சள் பொடியையும் போட்டு மூடினாள். ஸ்ரீ வேதவல்லி ரமணனின் திவ்ய ப்ரஸாதங்கள்!

* * * *

காஞ்சியில் வைசாகோத்ஸவம். தெருவெல்லாம் அலங்கரிக்கப் பட்டன. ஜனங்கள் எல்லையற்ற உத்ஸாகத்துடன் காணப்படுகிறார்கள். வனஜா ஸந்நிதித் தெருவில் ஓர் வீட்டு மாடியில் ஸாயங்கால வெளிச்சத்தில் ஏதோ படித்துக்கொண்டு உட்கார்ந்திருக்கிறாள். மெல்லிய குரலில் "பேராயிர முடையான் பேய்ப்பெண்டீர் நம்மகளை, தீரா நோய் செய்தான்" எனவும், வனஜாவின் கண்களில் பனிநீர் துளித்தது. "ஐயோ! இந்த ஆழ்வார்கள் இப்படி லோக விலக்ஷணமாய் எங்கிருந்து தோன்றினர்? வாழ்க்கையில் வாஸுதேவனுக்கும் நமக்கும் உள்ள ஸம்பந்த ஞானமே பரம லாபமென்றும், அதனால் வரும் பகவதநுபவமும், அவனன்றி கதியில்லாதிருக்குந் தன்மையே புருஷார்த்த மென்றும் நமக்கு வழிகாட்டிய இந்தத் தீரர்களை என்னவென்று சொல்லலாம்? உபகாரகர்களாகவோ? பந்துக்களாகவோ? அல்ல. நம்முடைய மூச்சுக் காற்றாகச் சொல்லவேண்டும். இவர்கள் ஸம்பந்தமற்ற வாழ்வு மரணத்திற்கு ஸமான மல்லவா?"

"காரார் கடல்வண்ணன் பின்போன நெஞ்சமும்
வாராதே என்னை மறந்ததுகாண்."

வனஜா தேம்பித் தேம்பி அழுதாள். "கண்ணு! நாழியாச்சுடீ. கீழே வா; கோவிலுக்குப் போகலாம்". ஜானகியம்மாளின் குரல்! பரபரப்புடன் வனஜா கீழே வந்தாள். எலெக்ட்ரிக் வெளிச்சத்தில் வனஜாவைப் பார்த்தாள். கோண வகிடு இல்லை. நாகரீகச் சேலை யில்லை. தலையை ஒழுங்காக வாரிப் பின்னலிட்டு, அரையில் ஆரணி பட்டுச்சேலை தரித்திருந்தாள். இதுகாறும் இருந்த மாம்பழக் கட்டும் மறைந்து, குலாசாரமான வைஷ்ணவக் கட்டே கட்டியிருந்தாள். மஹாலக்ஷ்மியே உருவெடுத்ததுபோல் இருந்தாள் வனஜா.

வேளைதோறும் ஸ்ரீ வரதனுடைய வடிவழகையும் வைசாகோத்ஸவத்தின் பெருமையையும் கண்ணாரக் கண்டு பெருமிதங் கொண்டாள். காலை வேளையில் அக் கஞ்சதளாக்ஷன் ஒருநாள் பெண்வேடம் பூண்டு பவனிவரும் அழகைக் கண்டாள். ஆச்சரியப்பட்டாள். ஐயோ! 'இதென்ன வடிவழகு?' என்றாள்.

"𑌤𑌾𑌂 𑌦𑍇𑌵𑌮𑌾𑌯𑌾𑌮𑌿𑌵 𑌧𑍀𑌰𑌮𑍋𑌹𑌿𑌨𑍀𑌂
𑌸𑍁𑌮𑌧𑍍𑌯𑌮𑌾𑌂 𑌕𑍁𑌣𑍍𑌡𑌲𑌮𑌣𑍍𑌡𑌿𑌤𑌾𑌨𑌨𑌾𑌮𑍍 ।
𑌶𑍍𑌯𑌾𑌮𑌾𑌂 𑌨𑌿𑌤𑌮𑍍𑌬𑌾𑌰𑍍𑌪𑌿𑌤𑌰𑌤𑍍𑌨𑌮𑍇𑌖𑌲𑌾𑌂
𑌵𑍍𑌯𑌞𑍍𑌜𑌤𑍍𑌸𑍍𑌤𑌨𑍀𑌂 𑌕𑍁𑌨𑍍𑌤𑌲𑌶𑌙𑍍𑌕𑌿𑌤𑍇𑌕𑍍𑌷𑌣𑌾𑌮𑍍"

என்கிற ஸ்ரீ பாகவத ஸ்லோகத்தைப் புலம்பினாள்.

20113

உபந்யாஸங்களில் வனஜா முதல், "வாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும் பூசித்தும்" அவள் வாழ்வு ஆரம்பித்தது. வரதனைக் கண்டு கண்டு மகிழ்வாள். 'கோடை லீவு முடிந்து சென்னைக்குச் சென்று விட்டால்,இந்த மா மணிவண்ணனை எங்கே காண்பது?' என்று ஏங்குவாள். "முத்தே மணியே மாணிக்கமே முளைவித்தே உன்னை எங்ஙனம் யான் விடுகேனே" என்பாள்.

* * * *

சித்தியுந் தானுமாகத் திருவல்லிக்கேணியில் ஓர் தனி வீட்டில் இருந்து வந்தாள் வனஜா. அவளுடைய புது வாழ்க்கைக்கு ஹாஸ்டல் ஒத்ததாக இல்லை. ஆடிமாதம் திருவாடிப்பூர உத்ஸவம் ஸேவிக்க ஸ்ரீ வில்லிபுத்தூர் சென்றாள். மேல ரதவீதியில் ஓர் தனி வீடும் அமர்த்திக் கொண்டாள். மல்லி நாடாண்ட மடமயிலான ஸ்ரீ ஆண்டாளின் ஸேவையில் மதித்து நின்றாள்.

வானுறு முகிலோ ! தன்மை வளந்தரு மதியோ ! வன்றிக்
கானுறு மயிலோ ! கண்ணூர் கவரி மான்பிணை யோ! இன்பத்
தேனுறு சுனையோ ! தெய்வக் கற்பகக் கொடியோ ! வன்றி
யானுறு தவமே யன்ன யாவளிவ் வரிவை யாவாள் !

ஏழாந் திருநாள் ஸ்ரீ விஷ்ணுசித்தன் செல்வியின் மடியில் ஶ்ரிய:பதி சயனிக்கும் பெருங்காட்சி கண்டு வனஜா திரும்புங்கால், ஜானகியம்மாள், "கண்ணு! அதோ மண்டபத்தில் நம் ஸ்வாமிகள் உத்ஸவத்திற்காக எழுந்தருளி யிருக்கிறாராம். வா தண்டன் ஸமர்ப்பித்துச் செல்லலாம்" என்று அழைத்துப் போனாள்.

ஸ்ரீ ஸ்வாமிகளின் ஸேவை வனஜாவிற்கு அடிக்கடி கிடைத்தது. அந்த உத்தம புருஷனின் அர்ச்சாவதார ருசியைக் கண்டு ஆச்சரியப் பட்டாள். "குழந்தாய்! இந்த ஆண்டாள்-ரங்கமன்னாரது சேர்த்தியில் கைங்கர்யம் செய்ய ப்ராப்தியுள்ளவர்கள் வைகுண்டத்தையும் நினைப்பார் களா? இம்மாதிரி வடிவழகைக் கண்ட ஆழ்வார்கள், "ஏரார் முயல் விட்டுக் காக்கைப்பின் போவதே!" என்று ஸ்ரீ வைகுண்டத்தையும் மதி யார்கள். மாயா விருளில் உறங்கும் உலகத்தைத் தட்டி எழுப்பிக் காப்பவன் மாதவன். அவனையும் எழுப்பிப் பணிசெய்வாள் இவ்வின்ப வல்லியாம் ஆண்டாள். குழந்தாய்! இப்பெண்ணரசியால் பாண்டிய நாடும் பெண்ணுலகுமே ஓர்படி உயர்ந்தது" என்றார்.

மற்றொரு நாள் ஸ்வாமி மிகவும் அன்புடன், ஜானகியம்மாளைப் பார்த்து "வனஜாவின் புருஷன் எங்கு இருக்கிறான்?" என்று கேட்டார். ஜானகி, "இரண்டு தலைமுறையாக நவ நாகரீகத்தில் மூழ்கிவிட்டார் கள் என் அக்காவின் புக்ககத்து ஜனங்கள். வனஜாவை மைஸூரில் நல்ல உத்தம ஆசார்ய புருஷர்களின் வீட்டில் ஏதோ ஸங்கல்பத்தால் கல்யாணம் செய்துவிட்டார்கள். கோவர்த்தநாசாரியர் என்று அந்த மஹான் ஜகத் ப்ரஸித்தராயிற்றே! அவரது குமாரன் வாஸுதேவனுக்கே அவளைக் கொடுத்திருந்தது. சாந்திக்கல்யாணம் ஆனவுடன் வனஜாவைப்

படிக்கக்கூடாது என்றார்கள். தாய் தந்தையர் ஸம்மதிக்கவில்லை. அவர்கள் பிடிவாதமாய் இருந்தார்கள். பையனும் வேறு விவாகம் செய்துகொண்டான். வனஜாவும் எம்.ஏ. ஆய்விட்டாள். ஆனால் ஸ்ரீ ஆண்டாள் க்ருபையில் ஸந்மார்க்கப் பித்துக்கொண்டுவிட்டாள். புதிதாய் விவாகமான பெண் சென்ற வருஷம் இறந்துவிட்டது. ஸ்ரீ ஆண்டாள் க்ருபை வைத்தால் வனஜா....'' என்பதற்குள் வனஜாவின் கண்களில் நீர் ததும்பியது.

"ஸ்வாமி! என் வாழ்க்கையில் பெரும் புயல் அடிக்கிறது. என் பதி என்னை அழைத்துக்கொண்டால், பதியுடன் சேர்ந்து ஸ்ரீ ரமா நாதனின் பணிவிடைகள் செய்யும் பாக்யவதி ஆவேன்'' என்றாள். ஸ்வாமி சிரித்தார். "கோவர்த்தநாசார்யர் எனக்குப் பூர்வாச்ரம பந்து. ஒரு கடிதம் தருகிறேன். வனஜாவை வாஸுதேவனிடம் ஒப்புவித்துவிட்டு வா. அவர் பதில் சொல்லமாட்டார். உடனே அழைத்துக்கொள்வார்'' என்றார்.

திருநாராயணபுரம் வைரமுடி உத்ஸவம். கோவர்த்தநாசாரியரின் திருமாளிகையில் எல்லையற்ற கூட்டம். ஸ்ரீ வைஷ்ணவர்கள் ஆணும் பெண்ணுமாய் ஆனந்தக் கூத்தடிக்கின்றனர். இரவு ஒருமணி இருக்கலாம். எலெக்ட்ரிக் லைட்கள் ஜ்வலிக்கின்றன. வனஜா திருமடைப்பள்ளியில் அடுப்பு மெழுகிக்கொண்டிருக்கிறாள். "கண்ணு! இன்னந் தூங்கவில்லையா?'' என்றாள் ருக்மிணியம்மா. வனஜா ஒடுங்கிய நடையுடன் கையில் துடைதுணியுடன், "காலையில் தேவராயர் மண்டபத்திற்குப் பெருமாள் எழுந்தருளுகிறார். மாமா, 'அதி சீக்ரம் ஸ்வாமிகளின் அபிகமந ஆராதநத்திற்காக எல்லாம் ஸித்தமாகவேண்டும். வெளி உள்ளு, கிணற்றுள்ளு எல்லாம் ஒழித்து நன்றாக இருக்கட்டும்' என்று சொல்லவில்லையா? என்ன தூக்கம்! செல்வப்பிள்ளையின் உத்ஸவம் ஆனவுடன் இருக்கவே இருக்கிறது தூக்கம்'' என்றாள்.

"போடி போ! விதம் விதமாய்க் கோலம் போடுவதும் மெழுகுவதும். உடம்பைப் பார்த்துக்கொள்ள வேண்டாமா? இத்துடன் நாலு மணிக்கு எங்களோடு ஸ்நாநத்திற்கு வேறே வந்துவிடுகிறாய்....'' என்னும் பொழுதே வாஸுதேவன், "என்ன! அந்த பாலயோகினி உனக்கு உபதேசம் செய்கிறாளா? அல்லது அவளுக்கு நீ உபதேசிக்கிறாயா?'' என்று சிரித்தவண்ணம் சொல்லிக்கொண்டே வந்தான். வனஜாவின் முகம் வெட்கத்தால் சிவந்தது. எப்பொழுது பார்த்தாலும் குருஸேவையும் ஸ்ரீ வைஷ்ணவ ஸேவையும் ஶ்ரிய: பதி ஸேவையும் கண்ட அவள் மனம் குதூஹலித்தது. தன் மாமனார் தன் பெருஞ் செல்வத்தைவிடத் தன் வரவில் மிகுந்த குதூஹலங்கொண்டு இன்புறுவதைக் கண்டு மனம் பொங்கினாள். "கேசவன் தமர் கீழ்மேலெழ் பிறப்பும்'' என்றும், "ஏழாட்காலும் பழிப்பிலோம்'' என்றும், "நாராயணனே நமக்கே பறைதருவான் பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய்'' என்றும், மெல்லிய குரலிற் பாடிய வண்ணம் கிணற்றுள்ளை மெழுக ஆரம்பித்தாள்.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ அஹோபில மடத்துக் கதைகள்

ஸ்ரீ ஆதிவண்சடகோப யதீந்த்ரர்

[திருப்பூந்துருத்தி V. க்ருஷ்ணஸ்வாமி அய்யங்கார், பங்களூர்]

(1)

ஸ்வஜனங்களாக இருப்பார் ஆயிரம்பேர் ஸ்தோத்ரம் பண்ணுவதைக் காட்டிலும், சத்ருவாக இருப்பவன் ஒருவன் கொண்டாடினால் அதுதான் மேல். ஸ்ரீமத் ராமாயணத்தை ஸேவிக்கும்போது பெருமாளைச் சுற்றமெல்லாம் பின்தொடரத் தொல்கான மடையச் செய்த கைகேசியும், ராகவனுடைய சரித்ரத்தில் ஸந்தேஹப்பட்ட பரதன் சொல்லுக் காற்றுமல், "பரதா! நீ என்ன சொன்னாய்? ராமன் பிறமாதர்களை இரண்டு கண்களால்கூடப் பார்த்ததில்லையடா!" என்றபோதும், இராவணன் தனது ஸாரதியைச் சீறி, "நீ என்ன செய்தாயடா? சத்ருக்களால் கொண்டாடப்படுகிறவனும் விக்ரமங்களினாலேயே ஸந்தோஷப்படுத்தி வைக்கவேண்டியவனுமான இந்த ராமனுக் கெதிரில் என்னை அல்பனாகச் செய்துவிட்டாயே!" என்று வருந்தும்போதும், ஆனந்தத்தால் கண்ணீர் சொரியாதாரை உணர்ச்சியே இல்லாதவர்கள் என்னலாம்.

ஸ்ரீமத் ஆதிவண் சடகோப யதீந்த்ரருடைய சரித்ரத்தை ஸேவிக்கும்போதும், இவருடன் பன்னிரண்டு நாள் இளைக்காமல் வாதம் பண்ணிய உதயாநுமிஸ்ரன் கடைசியில் தோற்றுப் போற்றினான் என்னுமிடத்தில் ஆநந்தத்தால் கண்ணீர் சொரிகிறோம். உதயபாநுமிஸ்ரன் ஸாமாந்ய னல்லன்; ஸகல சாஸ்த்ரங்களையும் கரை கண்டவன்; மிகவும் செல்வவந்தன்; பேசுவதில் இணையற்றவன்; வாதத்தில் ஒரு கோடி வரும்போது ஒன்பது கோடிகளுக்கப்பால் என்னவரும் என்று தெரிந்து பேசுகிறவன்; சுருங்கச் சொன்னால் ஸ்ரீ ஜீயருக்கேற்ற ப்ரதிவாதிதான்.

ம்ருகேந்த்ரன் என்றால் சிங்கந்தான். ஆனால் அதற்குக் காட்டில் ம்ருகராஜனாக அபிஷேகம் பண்ணியது யார்? இதற்காக ஏதாவது ஸம்ஸ்காரந்தான் உண்டா? ஒன்றுமில்லை அது தன்னுடைய விக்ரமத்தாலேயே ம்ருகங்களை ஜயித்தது. தானே ம்ருகராஜனாக இருக்கிறது. அதுபோல ஸ்ரீமத் ஆதிவண் சடகோப யதீந்த்ரரும் தம்முடைய கீர்த்தியை ஸஹியாது வந்து வாதப்போர் தொடுத்த புறச்சமய வாதிகளை யெல்லாம் வென்றிகொண்டு வாகைசூடித் தம்மை யெல்லாரும் "வாதிஸிம்ஹம்" என்று கொண்டாடும்படி திக் விஜயம் செய்தருளியது

உதயபாநுமிஸ்ரனுக்கு ஸஹிக்கவில்லை. ஸ்ரீ ஜீயரை வாதத்தில் வென்றால் ராமாநுஜ தர்சநத்தையே வென்றதாகும் என்று மிஸ்ரன் எண்ணினன். ஸ்ரீ ஜீயரும் மிஸ்ரனை ஜயித்தால் குத்ருஷ்டிகள் அனைவரையுமே ஜெயித்த தாகும் என்று நினைத்தார். இந்த வாத யுத்தத்துக்குக் காஞ்சிபுரந்தான் அரங்கமாயிற்று. இரண்டு கக்ஷியினரும் ஒத்துக்கொண்ட ப்ரபலமான பண்டிதர்களே மத்யஸ்தர்களாக அமர்ந்தார்கள். எல்லா சாஸ்த்ரங்களி லும் வாதம் செய்வதென்றும், தோற்றவர் ஜயித்தவருடைய மதத்தில் ப்ரவேசிப்பதென்றும் பந்தயம் வைத்துக்கொண்டார்கள். வேதாந்தம் நீங்கலாக மற்ற சாஸ்த்ரங்களில் முதலில் வாதம் ஆரம்பமாயிற்று. அதில் ஸுலபமாகவே ஜீயர் ஜயமடைந்தார். ஆனால் இந்த ஜயம் என்ன ப்ரயோஜநம்? வேதாந்தத்தில் ஜயித்தாலன்றோ ஜயம். வேதாந்தத்தில் இருவரும் கக்ஷிசொல்ல ஆரம்பித்தார்கள். கக்ஷிக்கு ஆக்ஷேபணை சொல் வதும் ப்ரதி கக்ஷி சொல்வதும் யுக்தியினால் தம் கக்ஷியை நிர்வஹிப்பதும் இலேசில் ஆயிற்றா?

. . சாந்தமூர்த்தியாகிய யதிராஜன் வீராவேசம் வந்தவர்போல் பேசுவார். மிஸ்ரனும் ஜீயருடைய கக்ஷிகளுக்குக் கொஞ்சமும் சளைப் பில்லாமல் பதில் கூறிக்கொண்டே வந்தான். ஸபையோர் பாடு கொண் டாட்டந்தான். ஜீயர் தம் கக்ஷிகளை வாதிக்கும்போது, இத்தோடு மிஸ்ரன் ஒழிந்தான் என்று எண்ணுவார்கள். இந்தக் கக்ஷிகளுக்கு மிஸ்ரன் ஸமாதாநம் சொல்லி மேல்கோடிக்குப் போகும்போது ஜீய ருக்குத்தான் தோல்வியோ என்றெண்ணுவார்கள். இந்த நிலைமையில் வெல்வாரார்? தோற்பாரார்? என்று நிச்சயிப்பது ஒருவருக்கும் முடியவில்லை.

முதல்நாள் வாதங் கடுமை. இரண்டா நாள் இன்னுங் கடுமை. போகப் போகக் கக்ஷிகள் அதிகரிக்கின்றனவே யொழியக் குறைகிற பாட்டைக் காணோம். இப்படிப் பதினோரு நாட்கள் ஆகிவிட்டன. நிலைமை மாறவில்லை. பதினொன்றா நாளிரவு ஸ்ரீ ஜீயர் யோகத்தில் எழுந்தருளியிருக்கையில் ஸ்ரீ அழகியசிங்கரும் ஸ்ரீ தேசிகனும் ஸேவை யளித்தார்கள். ஸ்ரீ தேசிகன், "ஜீயரே! உம்முடைய வாதத்தைக் கண்டு பரமானந்தமடைந்தோம். ஆனால் இவ்வாறு யுக்தியால் கக்ஷி கள் கூறிக்கொண்டே போனால் வாதம் எப்போது முடிவடையும்? ஆகை யால் நமது சத தூஷணீ க்ரமமாகக் கக்ஷிகள் சொல்லி அவனை ஜயிப்பீர்" என்று நியமித்தார்.

ஸ்ரீ தேசிகன் நியமித்தபடியே ஜீயர் மறுநாள் கக்ஷிகள் சொல்ல ஆரம்பித்தார். அவற்றை மிஸ்ரன் தன் ஸாமர்த்யத்தால் ஸமாளிக்கப் பார்த்தான். ஆனால் யுக்தியால் ஒரு கக்ஷிக்கு ஸமாதாநம் சொல்லப் போக, அதுவே தன்னுடைய கக்ஷியை பாதிப்பதாயிற்று. ஜீயருடைய கக்ஷிகள் ஓங்குவதைக் கண்ட மிஸ்ரன் திடீரென்று எழுந்து ஜீயர்

திருவடிகளில் விழுந்தான். சற்றுமுன் ஸிம்ஹம்போல் வீராவேசத்துடன் வாதஞ்செய்த ஜீயர் இப்போது சாந்தமூர்த்தியாக இருந்தார். மிஶ்ரனுடைய பேராற்றலைக் கண்டு அவனிடம் அன்புடன் உரையாடினர். ஜீயர் திருவடிகளில் உதயபாநு மிச்ரன் ஆச்ரயித்தான். ஜீயருடைய நியமனப்படி பேருளாளர் ஸந்நிதியிலும், தீபப்ரகாசர் ஸந்நிதியிலும் கோவில்கள் கட்டி ஸ்ரீ தேசிகனை ப்ரதிஷ்டை செய்தான். ஸ்ரீ ராமாநுஜ மதத்தின் வெற்றிக் கொடியை உயர்த்திய ஸ்ரீ ஆதிவண் சடகோப யதீந்த்ர மஹா தேசிகனை உலகமெல்லாம் கொண்டாடியது.

---

(2)

திருநாராயணபுர திவ்ய க்ஷேத்ரத்தில், ஒரு விசாலமான மண்டபத்தில் பன்னிரு நாமங்கள் சாத்திய பார்ப்பனச் சிட்டர்கள் பலர் வரிசையாக உட்கார்ந்திருக்கிறார்கள். அவர்கள் மத்தியில் ஆஜாநுபாஹுவாக ஒரு மஹாபுருஷன் எழுந்தருளியிருக்கிறார்.

மிகவும் கம்பீரமாகத் தோற்ற மளித்துத் தமது தோற்ற மாத்ரத்தாலேயே அனைவரையும் வசீகரித்த இம்மஹான் ஒரு அவதாரபுருஷன் என்னத்தட்டில்லை. !அவரது திருவரையில் விளங்கிய காவி வஸ்த்ரம் உதயத்தில் தேஜோராசியான ஸூர்யனைச் சூழ்ந்திருக்கும் அவனது செவ்விய ஒளிபோலும் தோன்றியது. திருக்கையில் த்ரிதண்டங்களைத் தரித்திருந்தது வேதமாகிற விளக்கின் ஒளியை உலகத்துக்குப் பரப்புவதற்காக ஏந்திநிற்கும் ஒரு தீபதண்டம்போலும் தோன்றியது. அவரது திருமுகமண்டலத்தில் தவழ்ந்த குறுநகை இவ்வுலகை அடிமை கொள்ளுவதற்காகப் ப்ரயோகிக்கப்பட்ட ஒரு திவ்யாஸ்த்ரம்போல் அனைவரையும் ஆகர்ஷித்தது.

இம்மகா புருஷனுக்கெதிரில் ஒரு ஸரஸ்வதி பீடம் சேர்த்து அதன்மேல் பல ஸ்ரீ கோசங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. ஸ்வாமி உபந்யஸிக்கிறார். சிஷ்யர்கள் ஸ்வாமியை நோக்கினவண்ணம் இருக்கிறார்கள். அவருடைய அமுதம்போன்ற மொழிகளிலன்றி வேறொன்றிலும் அவர்கள் மனம் செல்லவில்லை. தங்களையும் மறந்து ஸ்வாமியின் உபந்யாஸத்தைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். இந்த ஸ்வாமி யார்? இது என்ன உபந்யாஸம்? இவர் ஸ்ரீமதாதிவண் சடகோப யதீந்த்ர மஹாதேசிகனே. ஸ்ரீமத் பகவத் பாஷ்யகாரர் அருளிய ஸ்ரீபாஷ்யத்தை சிஷ்யகோடிகளுக்குக் காலக்ஷேபம் ஸாதித்தருளுகிறார். சுக ப்ரம்ஹத்தின் வாக்கிலிருந்து ப்ரவஹித்த ஹரிகதையின் அம்ருதத்தை மாந்தின பரீக்ஷித்து ராஜனுக்கு தீர்த்தபானத்தைக் கூட விட்டிருந்தும் பசிதாகங்களால் கொஞ்சமும் வருத்தம் ஏற்படவில்லை. தமது ஆசார்யரின் வாக்கிலிருந்து ப்ரவஹிக்கும் பாஷ்யாம்ருத ரஸத்தில் முழுகிக் கிடந்த ரஸிகர்களான சிஷ்ய வர்க்கங்களின் நிலைமையைச் சொல்லவேணுமோ?

விஷயத்தின் ஸ்வாரஸ்யத்தில் ஈடுபட்டிருந்த இவர்கள் தங்களையும் மறந்து, இவ்வுலகத்தையும் மறந்து, ஓர் கைவல்லான் சுவரில் தீட்டிய ஓவியங்களை நிகர்த்திருந்தார்கள். உபந்யாஸம் செய்தருளும் ஆசார்யனும் ஸ்ரீ பாஷ்யத்தின் ரஸத்தில் ஈடுபட்டுப் பரவசராயிருந்தார்.

காலக்ஷேபம் நெடுநேரம் நடந்தது. முடிகிற ஸமயம். ஸ்வாமிக்குத் தம் நினைவு வந்தது. சற்றே தலையைத் தூக்கினர். ஆஹா! அங்கு எதிரில் எதைக் கண்டார்? ஒரு க்ருஷ்ண ஸர்ப்பம். ஐந்து தலையுள்ளது. படத்தை விரித்துக்கொண்டும், ஸ்வாமியின் உபந்யாஸத்தைக் கேட்டுக் கொண்டும் ஆனந்தமாக ஆடிக்கொண்டிருந்தது. ஸர்ப்பத்தை ஸ்வாமி கண்டார். சிஷ்யர்களும் கண்டார்கள். "இது ஒரு ஸாதாரண ஸர்ப்பமாகத் தோன்றவில்லை. ஸாக்ஷாத் பாஷ்யகாரரே தம்முடைய பாஷ்யத்தின் அர்த்தத்தைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்போல் தோன்றுகிறது. நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?" என்று ஜீயர் சிஷ்யர்களைக் கேட்டார். சிஷ்யர்களும், "அடியோங்களும் அப்படித்தான் நினைக்கிறோம்" என்றார்கள். அதே நிமிஷத்தில் ஸர்ப்பமும் மறைந்தது. அன்று இரவில் ஸ்ரீ ஜீயருடைய ஸ்வப்நத்தில் ஸ்ரீ பாஷ்யகாரர் தோன்றினர். தோன்றி, "ஜீயரே! உம்முடைய ஸ்ரீ பாஷ்ய ப்ரவசநத்தைப் பார்த்து நாம் மிகவும் ஸந்தோஷித்தோம்" என்றார்.

இதைக் கேட்ட ஜீயருடைய திருவுள்ளம் பரமாநந்தத்தால் நிறைந்தது. ஸர்வோத்க்ருஷ்டமாக ஸர்வ லோகத்தாலும் கொண்டாடப்படுகிற இந்த ஸ்ரீ பாஷ்யத்தை அநுக்ரஹித்த ஆசார்யனே தம்மெதிரில் தோன்றி, தாம் செய்யும் ப்ரவசநத்தைக் கொண்டாடுவாரானல் அதைக்காட்டிலும் சிறந்ததோர் புருஷார்த்தமும் உண்டோ? இத்தகைய ஸர்வோத்க்ருஷ்டமான க்ரந்தத்தைச் செய்தருளிய மஹோபகாரகருக்குத் தாம் ஏதாவது ஒரு கைங்கர்யம் செய்யவேண்டுமென்று அவர் மனம் துடித்தது. ஆயினும், 'வேண்டுதல் வேண்டாமையில்லாத முற்றத் துறந்த இம்முனிவருக்கு என்ன கைங்கர்யத்தைச் செய்யலாம்?' என்று திகைத்தார். ஸ்ரீ ஜீயருடைய மநோ நிலையை அறிந்த பாஷ்யகாரர், "ஜீயரே! இந்தத் திருநாராயணபுரம் என்னுந் திருப்பதிதான் நம்முடைய விஜய ஸ்தாநம். இந்தத் திருப்பதி எம்பெருமானுக்கு நீர் ஏதாவது ஒரு கைங்கர்யம் செய்யும்" என்று நியமித்தார். "ததேயோஸ்மி" என்று நியமநத்தை ஶிரஸா வஹித்தார் ஸ்ரீ ஜீயர். உடனே மலர்ந்த முகத்துடன், தழுதழுத்த குரலில், "நம் ஸ்ரீ வேதாந்த தேசிகனையும் இங்கு ப்ரதிஷ்டை செய்துவையும்" என்றார் ஸ்ரீ பாஷ்யகாரர்.

மறு நிமிஷத்தில் ஸ்ரீ பாஷ்யகாரர் மறைந்தருள, ஸ்ரீ ஜீயர் தமது திருக்கண்களை விழித்தருளினர். அவர் ஹ்ருதயத்தில் ஆநந்தம் பொங்கிக்கொண்டிருந்தது. அப்போது அங்கு சில வ்ருத்தர்களான ஸ்ரீ வைஷ்ணவர்கள் நின்றுகொண்டிருந்தார்கள். "இந்தத் திவ்யதேசத் தெம்பெரு

ம்மானுக்கு என்ன கைங்கர்யம் செய்யலாம்?'' என்று ஸ்ரீ ஜீயர் அவர்களைக் கேட்க, அவர்களும், "இந்த எம்பெருமான் திருக்கோயிலின் பெரிய கோபுரம் இடிந்திருக்கிறது. அதை த்ருடமாகச் செய்தருள வேண்டும்'' என்றார்கள். ஜீயர் சற்றே திரும்ப, அங்கோர் ப்ரபு தம்மை ஸேவிக்க மிகுந்த த்வரையுடன் நின்றுகொண்டிருக்கக் கண்டார். அந்த ப்ரபு அந்தத் தேசத்தின் அரசனே. ஜீயர் தம்மைக் கடாக்ஷிக்கக் கண்டு, ப்ரபு ஓடோடியும் வந்து ஜீயரைப் பலமுறை ஸேவித்தார். ஸேவித்து, "ஸ்வாமீ! தீராத ஒரு வ்யாதியின் தொந்தரவால் அடியேன் வருந்திக் கொண்டிருக்கிறேன். அந்த வ்யாதியைப் போக்கி அடியேனை ரக்ஷித்தருள வேண்டும்'' என்று ப்ரார்த்தித்தார். 'இதென்ன ஆச்சர்யம்! ஸ்ரீ பாஷ்யகாரர் ஒரு கைங்கர்யத்தை நியமித்தருளினர். ஸ்ரீ வைஷ்ணவர்கள் எம்பெருமானுடைய பெரிய கோபுரத்தைக்கட்டவேண்டுமென்று ப்ரார்த்தித்தார்கள். இந்தக் கைங்கர்யத்தைப் பூர்த்திசெய்ய அந்த தேசத்தின் அரசனே வந்து எதிரில் நிற்கிறான். இதெல்லாம் ஸ்ரீ சிங்கப்பிரானுடைய திருவிளையாடல்தான்' என்று நினைத்தார் ஸ்ரீ ஜீயர்.

"அரசனே! இந்த ஸந்நிதியின் பெரிய கோபுர கைங்கர்யத்தைச் செய்துவை. இது முடிந்தவுடனேயே உன் வ்யாதி நீங்கி, நீ ஸ்வஸ்தம் அடைவாய்'' என்று அநுக்ரஹித்தார். அதிசீக்ரத்தில் கைங்கர்யம் முடிந்துவிட்டது. அரசனுடைய வ்யாதியும் நீங்கிற்று. ஸ்ரீ வேதாந்த தேசிகனுடைய திருப்ரதிஷ்டையும் ஆயிற்று. எம்பெருமானுக்கும் ஸ்ரீ தேசிகனுக்கும் உத்ஸவங்கள் மிகவும் ஸம்ப்ரமமாக நடந்தன. இந்த ஸ்ரீமதாதிவண் சடகோப யதீந்த்ரர் ஓர் அவதார புருஷரே என்று அனைவரும் கொண்டாடினர்கள்.

ஸ்ரீ:

ஸ்ரீ அழகியசிங்கருடைய ஸஞ்சாரம்

சென்ற தைமாஸக் கடைசியில் பெருமாள்கோவிலைவிட்டுப் புறப்பட்டபிறகு ஸ்ரீ அழகியசிங்கர் அதற்கு ஸமீபத்திலுள்ள தூசி, மாமுண்டூர், மலையாங்குளம், முக்கூர், இஞ்சுமேடு, தாமல், நாட்டேரி, சிறுநாவல்பட்டு, இசையனூர், காவேரிபாக்கம், பூண்டி முதலிய க்ராமங்களுக்கு எழுந்தருளி, அங்கங்கு இருக்கும் ஶிஷ்ய வர்க்கங்களை அநுக்ரஹித்துக்கொண்டு, இப்பொழுது திருப்பாக்கடலில் எழுந்தருளி இருக்கிறதாகத் தெரிகிறது. அநேகமாக இன்னும் இரண்டொரு மாஸத்திற்குள் சோளஸிம்ஹபுரம் திருப்பதி முதலிய ஸ்தலங்களுக்கு எழுந்தருளும்படியாக இருக்கலாம். ஸ்ரீ லக்ஷ்மீந்ருஸிம்ஹன் இந்த ப்ரதேசங்களுக்கு எழுந்தருளி பஹுகாலமாகிவிட்டபடியால், எப்பொழுது மறுபடியும் ஸ்ரீ ஶரண்யனை ஸேவிக்கப்போகிறோமென்று வருந்தியிருந்த பக்தகோடிகளின் மநோரதம் ஸுக்ருதவசத்தால் இப்பொழுது நிறைவேறி வருகிறது.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹவரஹாய நம:

ஸ்ரீ. உப. வே. திருக்கோட்டியூர் ஸ்வாமி

—

(1)

[புதுக்கோட்டை ஸ்ரீ. உப. அ. ஸ்ரீநிவாஸாசார்யர், எம். ஏ.]

"என்ன நோன்பு நோற்றாள்கொலோ இவனைப் பெற்ற வயிறுடையாள்" என்று எல்லோரும் கொண்டாடும்படியான குணங்களையுடையரான இந்த மஹான், அறுபத்துநான்கு வருஷங்களுக்குமுன் ஒரு கார்த்திகை மாதத்து ரோஹிணி நக்ஷத்திரத்தினன்று திருக்கோட்டியூரில் ஸ்ரீ கோபாலாசார்ய ஸ்வாமிக்குக் குமாரராக அவதரித்தார். குழந்தையின் தேஜஸ்ஸையும் பின்னால் விகஸிக்கப் போகிற ஆத்மகுணங்களையும் கண்டு பெற்றோர் 'ஸ்ரீஸௌம்ய நாராயணன்' என்று பொருத்தமான திருநாமத்தை வைத்தனர். கருவிலே திருவுடையராதலால், ஸ்வாமி பால்யத்திலிருந்தே பகவத்பக்தியும் பாகவதப்ரேமமும் உடையவராயிருந்தார். உபநயநம் ஆனதும் ஊரிலேயே ஸம்ஸ்க்ருத த்ராவிட வேதாத்யயநம் செய்தார். பிதாமஹரான ஸ்ரீ ஸுந்தராசார்ய ஸ்வாமியினுடைய காலக்ஷேப கோஷ்டியிலும் அந்வயித்து வந்தார். வேதாந்தத்திற்கு அங்கம் என்று வ்யாகரணம் மீமாம்ஸை முதலிய சாஸ்த்ரங்களை அப்யஸித்தார். இப்போது திருவநந்தபுரத்தில் ஸர்வகலாசாலையில் ஆராய்ச்சிக் கழகத்தில் எழுந்தருளியிருக்கும் வித்வான் ஸ்ரீ எம்பார் க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமியிடம் ந்யாய சாஸ்த்ரத்தைப் பூர்ணமாகப் படித்தார். சிறிய பிள்ளையாயிருந்த ஸ்ரீ ஸௌம்ய மூர்த்தியின் ஸூக்ஷ்ம புத்தியையும் குணங்களையும் கண்டு, 'அப்போதே எனக்கு அவரிடத்தில் கௌரவமும் விசேஷ ப்ரீதியும் உண்டு' என்று எம்பார் ஸ்வாமி சொல்லக் கேட்டிருக்கிறேன்.

பதினாறுவது வயதிற்குள்ளேயே பிதாமஹர் ஸந்நிதியில் வேதாந்த க்ரந்தங்களையெல்லாம் நம் ஸ்வாமி காலக்ஷேபம் செய்து முடித்தாயிற்று. ஸ்வாமியினுடைய புத்தி கூர்மையைக் கண்டு ஸந்தோஷித்துத் தமக்குப் பின் ஸித்தாந்த ப்ரவசநத்திற்கு இவரே தகுதியானவர் என்று திருவுள்ளம்பற்றி, ஆசார்யரான பிதாமஹர் இவருடைய போதநா சக்தியை வளர்க்க ஆரம்பித்தார். காலக்ஷேப கோஷ்டியில் தாம் உட்கார்ந்து கொண்டு இவரைக்கொண்டு ப்ரவசநம் செய்வித்து, ஆங்காங்கு உபபாதநம் செய்யவேண்டிய விஷயங்களை எடுத்துக் காட்டிப் பழக்கி வைத்தார். நாளடைவில் இவருடைய ப்ரதிபையும் போதநா சக்தியும் ஒப்பற்று விளங்கக் கண்ட இவரது பிதாமஹர் ப்ரவசநம் முழுவதையும் இவரிடமே ஒப்பித்துவிட்டார். இவருக்கும் ப்ரவசநத்தில் ருசியும் ஸ்ரத்தையும் இருந்தபடியால் பரிபூர்ணமாக அதில் ஈடுபட்டார். தம் சரீர ஸ்ரமத்தையும் குடும்ப யோக க்ஷேமத்தைப்பற்றியும் கொஞ்சம்

கூட நினைப்பதில்லை. ரயிலில் செல்லும் வழக்கமிருந்தால், பந்து பரிபாலநம் முதலான ஸங்கேதங்களுக்காக ஸ்வாமி அடிக்கடி வெளியூர் செல்ல நேரிடும். அதனால் காலக்ஷேபத்திற்கு அடிக்கடி இடையூறு வரும் என்று ரயிலில் ஏறுவதை நிறுத்திவிட்டார். திருவணை திருநாராயண புரம் முதலான க்ஷேத்ரங்களுக்கு யாத்ரை செய்தபோதும், கால் நடையாகவோ அல்லது தனிப்பட அமர்த்தப்பட்ட வண்டியிலோ சென்றார். ப்ரதிதிநம் காலையில் ப்ராம்ஹ முஹூர்த்தத்தில் எழுந்து ஸ்நாநம் ஸந்த்யை ஔபாஸநம் முதலான நித்ய கர்மங்களை அநுஷ்டித்துப் பத்து நாழிகை வரையில் அத்யாத்ம க்ரந்தங்களை காலக்ஷேபம் ஸாதித்தாகும்.

அதன்பின் பகவதாராதநம் செய்து, அதிதிகள் யாராவது இருந்தால் அவர்களுடன் அமுது செய்தருளியாகும். இந்த ஸ்வாமியின் திருமாளிகையில் அதிதிகள் இல்லாத நாட்கள் இராதென்றே சொல்லலாம். ஊருக்குப் புதிதாக வரும் ஸ்ரீ வைஷ்ணவர்களோ, ஸ்வாமிக்குத் தெரிந்தவர்களோ, எல்லோரும் ஸ்வாமியின் திருமாளிகையைத் தேடிச் செல்வார்கள். அயல் ஊர்களிலிருந்து வரும் சிஷ்யர்களில் சிலர் ஸ்வாமியின் திருமாளிகையிலேயே சாப்பிட்டுக்கொண்டு காலக்ஷேபம் செய்வதும் உண்டு. அடியேன்கூட அவ்விதம் சிலகாலம் ஸ்வாமி திருமாளிகையிலேயே இருந்து காலக்ஷேபம் செய்திருக்கிறேன். 'காசின்வாய்க் கரம் விற்கிலும் கரவாது மாற்றிலி சோறிட்டுத் தேச வார்த்தை படைக்கும் வண்கையினர்கள் வாழ்திருக்கோட்டியூர்' [ஒரு பொன்னுக்கு ஒரு பிடி நெல் விற்கும்படியான க்ஷாம காலத்திலும், தங்களுக்குப் பிற்காலத்துக்கு வேண்டும் என்று வஸ்துக்களை மறைத்து வைக்காமலும், ப்ரத்யுபகாரத்தை எதிர்பாராமலும், பசியென்று வந்தவர்கள் யாராயிருந்தாலும், அன்னம் கொடுத்து அதனால் 'உதாரர்' என்று உலகம் கொண்டாடும் பாக்கியவான்கள் வாழ்கின்ற திருக்கோட்டியூர்] என்ற பெரியாழ்வார் அருளிச்செயல் இந்த ஸ்வாமியின் அநுஷ்டாநத்தால் மூதலிக்கப்பெற்றது.

மத்யாநத்தில் மந்த்ர ஜபமும் பாரதம் ஸ்ரீ விஷ்ணுபுராணம் பாத்மம் முதலான புராண படநமும் நடக்கும். ஸாயங்காலத்தில் பகவதாராதநம் செய்து தாமும் அமுது செய்தபிறகு, ஸ்ரீமத் ராமாயணம் ஸ்ரீபாகவதம் முதலான புராண ப்ரவசநங்கள் நடைபெறும். ஏகாதசி முதலான உபவாஸ திநத்தன்றும் இந்தப் பாடங்கள் நிற்கா. பகவத் கதா ரஸாநுபவத்தால் அன்றும் கண்ட த்வநியும் குறையாது. ப்ரதிதிநமும் ஸாயங்காலத்தில் கோவிலுக்குச் சென்று, அங்கு எழுந்தருளியிருக்கும் எம்பெருமானை மங்களாசாஸநம் செய்வது தவறாது. இதற்கிடையில் யார் எது வாசிக்கவேண்டுமென்றாலும் பாடம் சொல்லிக் கொடுக்கச் சலிப்பதேயில்லை. சிறுவர்கள் வந்து ஸ்வாமியிடம் ரகுவம்சம் போஜசம்பூ வாசிப்பதை அடியேன் பார்த்திருக்கிறேன். வ்யாகரணத்

தில் மஹாபாஷ்யம் வரையிலும், மீமாம்ஸையில் ஶாபரபாஷ்யம் முதலானவையும் பாடம் ஸாதித்திருப்பதாகக் கேட்டிருக்கிறேன். தர்க்கத்தில் வாத க்ரந்தங்களும், அத்வைத ஸித்தி முதலான அத்வைத க்ரந்தங்களும், ஸ்வாமியிடம் வாசித்தவர்கள் பலர் இருக்கிறார்கள். அடியேனிடம் முதல்முதல் ஸ்வாமியின் க்ருபை பெருகுவதற்கு ஹேது, ந்யாய குஸுமாஞ்ஜலி பாதஞ்சல யோகஸூத்ரம் முதலானவற்றை அடியேன் ஸ்வாமியிடம் படித்ததே. இவ்வளவு கார்யங்களுக்கிடையே யாராவது ஒருவர் வாசிக்க வந்து காத்துக்கொண்டிருக்கிறார் என்று தெரிந்துவிட்டால், ஸ்வாமியின் திருமேனியில் ஒரு பரபரப்பும் தம்மால் ஏற்பட்ட காலதாமதத்திற்கு மனத்தில் ஒரு அநுதாபமும் உண்டாவதை நேரில் கண்டவர்களே அறியமுடியும்.

ஸ்ரீ பாஷ்யம், கீதாபாஷ்யம், ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயஸாரம், பகவத் விஷயம் இவைகள் எத்தனை தடவை ஸ்வாமியால் ப்ரவசநம் செய்யப்பட்டன என்பது திட்டமாக அடியேனுக்குச் சொல்லத் தெரியவில்லை. ஒவ்வொரு க்ரந்தமும் குறைந்தது இருபது தடவையாவது இருக்கலாம். ஸ்ரீ பாஷ்யகாரருக்கு ரஹஸ்யார்த்தங்கள் கிடைத்த திருக்கோட்டியூரில் அவதரித்து, ஸதாசார்ய பரம்பரையில் அவ்வர்த்தங்களைக் கேட்டருளியிருந்தபடியால், ஸ்வாமி ரஹஸ்யார்த்தங்களுக்கு நிதியாயிருந்தார். பகவத் விஷயம் தங்கிலம். பரபக்ஷ நிராகரண பூர்வகமாக ஸ்வபக்ஷ ஸ்தாபநம் செய்யும் ஸ்ரீ பாஷ்யாதிகளில் ஒப்பற்ற தெளிவும் இருந்தது. ஶ்ருத ப்ரகாசிகை, கீதாபாஷ்ய தாத்பர்ய சந்த்ரிகை, பகவத் விஷயம் ஈடு முப்பத்தாறுயிரப்படி, சில்லறை ரஹஸ்யங்கள், தத்வ முக்தாகலாபம், ஸர்வார்த்த ஸித்தி, சததூஷணி முதலான க்ரந்தங்களை ஸ்வாமியிடம் பலபேர் காலக்ஷேபம் செய்திருக்கிறார்கள். அதே மாதிரி பாகவதம் பல தடவைகளும் ஸ்ரீமத் ராமாயணம் பல தடவைகளும் சொல்லப்பட்டிருக்கின்றன.

ப்ரவசநாரம்பத்தில் முதல்நாள் நடந்ததை ஸங்க்ரஹமாக அநுவதித்து, அன்றைய விஷயத்தோடு பொருந்தும்படி ஸங்கதியைக் காட்டும் ஸ்வாமியின் சக்தி மற்றொருவரிடம் காணவரிது. ப்ரவசந காலத்திலும் 'முன் வாக்யத்திலிருந்து எந்த சங்கைக்குப் பரிஹாரமாகவோ, அல்லது எந்த விஷயத்தை விளக்கவோ, பின் வாக்யம் எப்படி எழும்புகிறது, ஒவ்வொரு வாக்யத்திலும் உபயோகப்படுத்தப்பட்ட பதங்களின் ஸ்வாரஸ்யம் என்ன? அதே அர்த்தத்தைக் கொடுக்கும் வேறு பதங்கள் இருக்க ஒரு குறிப்பிட்ட பதத்தை உபயோகித்ததின் கருத்து என்ன?' என்ற இவைகளை விளக்கி, அழகாக அருளிச்செய்வதைக் கேட்டுக்கொண்டிருப்பதே ப்ரம்ஹாநந்தமா யிருக்கும். பெருமாளுக்கு ஆஸ்தாநத்திலிருந்து புறப்பாடு ஆய்விட்டது என்றதைக் காட்டும் அதிர்வெடி சத்தமும் சங்கநாதமும் கேட்டால், உடனே காலக்ஷேபத்தை நிறுத்தி விட்டுப் பெருமாளை ஸேவிக்க ஸ்வாமி எழுந்தருளியாகி விடும். ஸ்ரீரங்

கத்தில் ஸ்வாமி எழுந்தருளி யிருந்தபோது அடிக்கடி ஸ்ரீரங்கநாதனுடைய உத்ஸவங்களினால் இந்த காலக்ஷேபத்திற்கு விக்நம் ஏற்படுவது வழக்கம். அப்போது ப்ரமாணத்தை அறிவதில் இருந்த மோஹத்தால், அதனால் காட்டப்படும் ப்ரமேயமான பெருமாளையே 'காலக்ஷேப விரோதி' என்று அடியேன் நினைத்ததுண்டு. அழகிய மணவாளன் உத்ஸவ காலங்களில் உறையூர் ஜீயபுரம் முதலான வெளியூர்களுக்கோ வெளி மண்டபங்களுக்கோ எழுந்தருளினால், ஸ்வாமி தமது திருமேனியில் அசக்தியைப் பாராட்டாது அநுயாத்ரையாக எழுந்தருளுவது நிச்சயம். ஏற்கெனவே உபவாஸாதி காய க்லேசத்தால் திருமேனியில் தார்ட்யமில்லை யாதலின், அநுயாத்ரையில் ஸ்வாமி இடைமேல் திருக்கைகளை வைத்துக்கொண்டு எழுந்தருளுவதைப் பார்த்தால், "ஒசிந்த நுண்ணிடைமேல் கையைவைத்து நொந்து நொந்து கசிந்த நெஞ்சினளாய்க் கண்ணநீர் துளும்பச் செல்லுங்கொல்" [6, 7, 8] என்று திருவாய்மொழியில் பராங்குசத் தலைவியைக் குறித்துத் தாய் இரங்கும் பாசுரத்தின் அர்த்தம் புலப்படும். பெருமாள் கோவிலில் ஸ்வாமி எழுந்தருளி யிருந்தபோது, வைசாகோத்ஸவத்தில் தேவப் பெருமாளோடு காலைமாலை அநுயாத்ரை செய்தபோது ஸேவித்தவர்களும் இப்படியே கூறக் கேட்டுள்ளேன். அநுயாத்ரையின்போதும் வித்வான்களுடனும் சாஸ்த்ர விசாரம் அல்லது பகவத் குணாநுபவம்தான்.

சாஸ்த்ரமூல மில்லாத ஸம்ப்ரதாயத்தையும் ஸங்கேதத்தையும் ஒப்புக்கொள்ளுவது மில்லை; பிறருக்கு உபதேசிப்பது மில்லை. மற்ற ஸித்தாந்திகளையும் ஸம்ப்ரதாயைகதேசங்களையும் தூஷிப்பதுமில்லை. ஆனால் உபதேச காலங்களில் தத்வவிமர்சம் செய்யும்போது ப்ரமாணங்களின் கதி வேறுவிதமாக இருக்க, சிலர் ஸங்கேதத்திற்காக ஒருவாறாக அநுஷ்டிக்கிறார்கள் என்று ஸாதிப்பது வழக்கம். ஸ்ரீஜயந்தி ந்ருஸிம்ஹ ஜயந்தி தினங்களில் ராத்ரி பாரணையும், ஸ்ரீராம நவமியில் மறுநாள் பாரணையும் ஸ்வாமியின் அநுஷ்டானம். அஷ்டமீ சதுர்த்தசி இந்த தினங்களில் பகலில் பலஹாரமும் இரவில் போஜநமும் செய்வது வழக்கம்.

தென்கலை, வடகலை, மடம், முநித்ரயம் என்கிற ஸம்ப்ரதாயங்களுக்குள்ளே இருக்கும் அபிப்ராய பேதங்களைக் கண்டு, 'எம்பெருமானுடைய ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்தவர்களுக்குள்ளே இந்தப் பிளவுகள் ஏற்பட்டுப் பாகவதாபசாராதிகளுக்குக் காரணமாக இருக்கின்றனவே' என்று மிகவும் சோகிப்பதுண்டு. ப்ரதிவாதிகள் புஸ்தகங்கள் எழுதினால் அதைக் கண்டித்துத் தாமும் எழுதுவதில்லை; எழுதுவோரையும் வேண்டாமென்று சொல்லுவதுண்டு. 'பணத்தைச் செலவழித்து இம்மாதிரி புஸ்தகங்கள் எழுதுவதால் அச்சாபீஸ்காரர்களுக்கு லாபமேயொழிய வேறு ஒரு ப்ரயோஜநமும் ஏற்படாது. இளமதிகளா யிருப்பவர்களுக்கு இதைப் படிப்பதால் ஆக்ரஹ மேற்படுவதால் விபரீத பலமுண்டாகிறது. அந்தப் பணத்தை யாராவது ஒரு பாகவதனுக்குக்

கொடுத்தால் எம்பெருமான் திருவுள்ளத்திற்கு உகப்பாக இருக்கும்' என்று அடிக்கடி ஸாதிப்பது வழக்கம்.

'ஸகல சராசரங்களும் பகவச்சரீரம்' என்ற சாஸ்த்ரார்த்தத்தை உள்ளங்கை நெல்லிக்கனியாக உணர்ந்த ஸ்வாமிக்கு ஒருவரிடமும் த்வேஷமே கிடையாது. விசேஷித்துப் பகவத் பக்தியுள்ளவர்கள் எந்த ஜாதியினராயினும் எவ்வளவு சிறியவர்களாயினும் அவர்களை மிகவும் கௌரவித்து இன்பமாகப் பேசி விசாரிப்பார். ஸ்வாமியின் திருவுள்ளத்தால் சத்ரு என்று ஒருவருமே கிடையாது. திருமுகத்திலிருந்து பிறர் மனத்தைப் புண்படுத்தும் வார்த்தையோ அல்லது அநாகரிகமான சொல்லோ வராது. ஆசார்ய தூஷணம் பாகவத நிந்தை முதலானவற்றை ஒருவர் செய்யக் கேட்டு மிகுந்த கோபம் அடைந்ததாகத் தோன்றும் காலத்திலும், 'அவன் துஷ்டன்' என்பதைத் தவிர வேறு சொல் வெளி வந்ததே கிடையாது.

இந்த ஜ்ஞாநாநுஷ்டாநங்கள்போல் ஸ்வாமியின் வைராக்யமும் யாவர்க்கும் தெரிந்ததே. பால்யத்திலிருந்தே யோக்யதையிருந்தும், ஸதஸ்ஸுகளுக்குச் சென்று ஸம்பாவனை வாங்குவது அல்லது கண்டபடி அர்த்தார்ஜநம் செய்வது முதலான குணங்கள் ஸ்வாமியிடமில்லை. வைராக்ய குணம் பரிபூர்ணமாக நம் ஸ்வாமியிடம் இருந்தது. தநத்திற்காக என்று அசாஸ்த்ரீயமான ஒரு கார்யத்தையும் செய்தறியார். ஓடி ஓடி ஸம்பாதிக்கவேண்டும் என்ற மநோபாவமே இல்லை. 'தர்மமாகக் கிடைத்ததைக்கொண்டு பகவானுக்கு நிவேதநம் செய்து நாமும் புஜிப்போம். ப்ராம்ஹணனுடைய இந்த சரீரம் ஸுகாநுபவத்திற்காக ஏற்படவில்லை. இங்கே சரீரத்தை ஒறுத்து இந்த்ரியங்களை அடக்கி இருப்பதற்கும், பின்பு பரலோகத்தில் ஸுகத்தை அநுபவிப்பதற்காகவுமே உண்டாக்கப்பட்டது' என்ற ரிஷி வாக்கைக் கடைப்பிடித்து நடத்தி வந்தவர் நம் ஸ்வாமி. இந்த மனப்போக்கு இருந்தபடியால், நித்யமான பகவதாராதநத்திற்கும் குடும்ப யோகக்ஷேமத்திற்கும் போதிய ஸௌகர்யமில்லாவிட்டாலும், அதை லக்ஷ்யம் செய்யாது, க்ரந்த ப்ரவசநத்திலேயே ஊன்றிய உள்ளமுடையார். ஒரு நாள் ஸ்வாமி தேவிகள், "இன்று பெருமாள் திருவாராதநத்துக்குப் போதிய ஸாமக்ரி இல்லையே!" என்று காலக்ஷேப மத்தியில் இருந்த ஸ்வாமியிடம் தெரிவிக்க, 'கண்ணன்—ஸ்வாமிக்கு ஆராத்ய தேவதை அர்ச்சாரூபியான ஒரு கண்ணன்—வேண்டியதைப் பெற்றுக்கொள்வான்' என்று ஸாதித்துக் காலக்ஷேபத்திலேயே இருந்தருளினார். சற்று நேரத்திற்கெல்லாம் ஒரு வண்டியில் ததீயாராதநத்திற்கு வேண்டிய ஸகல ஸாமான்களுடனும் ஒருவர் வந்து 'இன்ன ஊரிலிருந்து க்ருஷ்ணன் இவற்றை ஸமர்ப்பித்துவரச் சொன்னார்' என்று அடிபணிந்தார். 'அண்டினவர்களின் யோக க்ஷேமத்தை நான் சுமந்து செய்கிறேன்' என்ற ஸ்ரீ கீதாஸ்லோகத்

தின் பூர்வார்த்தத்தை ஸ்வாமி அநுஷ்டித்து நிற்கவே, ஶரண்யன் உத்த ரார்த்தத்தைத் தான் அநுஷ்டித்துக் காட்டினன்.

குடும்பத்தில் பற்று இருப்பதுபோல் குழந்தைகளை லாலநம் செய்வதும், காலக்ஷேபத்திலும் அவைகளை மடியில் வைத்துக்கொண்டிருப் பதும் செய்தாலும், உண்மையில் தாமரைஇலை நீர்போல்தான். ஒரு ஸம யம் ஸ்வாமியின் குமாரத்தி நோய்வாய்ப்பட் டிருந்தாள். எல்லோரும் பயந்து கவலையுடன் இருந்தனர். ராமாயண ப்ரவசநம் செய்யவேண் டிய காலம்வந்ததும், ஸ்வாமி திருமாளிகையை விட்டுக் கிளம்பியாயிற்று. அருகில் நின்றவர் அந்நிலைமையைச் சொல்ல, "நான் இங்கே இருந்து என்ன செய்யப்போகிறேன்? அங்கே போய்ப் பகவத் குணத்தைச் சொன்னால் அதுவே நாம் செய்யக்கூடிய சிகித்ஸை" என்று அருளிச் செய்தாயிற்றும். இதுவன்றோ ஸ்ரீவைஷ்ணவ லக்ஷணம்! அப்படியே அந் திம திவஸத்திலும் குடும்பத்தையும் இஹ லோகத்தையும்பற்றிய ஒரு வார்த்தைகூட இல்லாமல், காலையிலிருந்து கடைசி க்ஷணம் வரையில் ஸ்ரீமந் நாராயண ஸ்மரணம் பண்ணிக்கொண்டே தெளிவுடன் எழுந் தருளி யிருந்தபடி என்று அருகிருந்தோர் கூறக் கேட்கிறோம்.

சுருங்கச் சொல்லில் ந்யாஸ விம்சதியில் ஸ்ரீதேசிகன் ஆசார்யன் இருக்கவேண்டியதாகக் கூறிய குணங்கள் அவ்வளவும் அடியேன் ஆசார்ய ரான ஸ்ரீஸௌம்யமூர்த்தி ஸ்வாமியிடம் பொருந்தியிருந்தன. இது ஸ்வாமி திருவடியில் அந்வயித்தோர் மட்டும் சொல்லும் சொல்லல்ல. நம் ஸ்ரீ வைஷ்ணவத்தைச் சார்ந்தோ ரனைவரும் ஒப்புக்கொண்ட விஷயம். ந்யாஸ விம்சதி ஶ்லோகத்தைச் சற்று மாற்றி யமைத்தால், அது ஸ்ரீ ஸ்வாமிக்குச் செவ்வனே பொருந்தும் என்பதைப் பார்க்கலாம்.

"सिद्धः सत्संप्रदाये स्थिरमतिरनघः श्रोत्रियो ब्रह्मनिष्ठः
सत्त्वस्थः सत्यवादी समयनियतया साधुवृत्त्या समेतः ।
डम्भासूयादिमुक्तो जितविषयगणो दीर्घबन्धुर्दयालुः
स्वालित्ये शासिता च स्वपरहितपरो देशिकः सौम्यमूर्तिः ॥"

ஆசார்ய ஶ்ரேஷ்டரான ஸ்ரீஸௌம்யமூர்த்தி ஸ்வாமி ஸத்ஸந்ததி யில் பிறந்து, ஸதாசார்ய ஸம்ப்ரதாயத்தால் வந்த ஞானத்தைத் தாம் ஒரு ஆசார்யனை ஆஶ்ரயித்துப் பெற்றவர். தத்வ ஹித புருஷார்த்த விஷயங் களில் நிச்சயமான புத்தியையுடையவர். இதனால் கீழ்ப்பட்ட விஷயங் களைப் பற்றுதலாகிற தோஷமற்றவர். இதற்கெல்லாம் காரணமான வேதாந்தத்தைக் கசடற ஓதியுணர்ந்தவர். உணர்ந்தபடி ப்ரஹ்மத்தில் நிலைபெற்றவர். அதனால் உண்டான ஸத்வ குணத்தை யுடையவர். ராக த்வேஷ மில்லாததால் உண்மை யுரைப்பவர். சாஸ்த்ரீயமான கட்டுப்பாடு களுடன் கூடியதாய், மேலையார்கள் செய்வனவான ஸாதுக்களின் ஒழுக் கங்களைக் கடைப்பிடித்தவர். டம்பம் அஸூயை முதலான துர்க்குணங்க ளற்றவர். இந்த்ரியங்களை ஜயித்தவர். ஸர்வேஶ்வரன்போல எல்லோ

ருக்கும் பந்துவாய் ப்ரியமாயிருப்பவர். அதற்குக் காரணமான தயா குணம் நிரம்பியவர். ஒழுக்கம் தவறியவர்களைக் கண்டித்துத் திருத்துபவர். இவை யெல்லாவற்றுக்கும் மேல் ஸகல ஜீவராசிகளினுடைய ஹிதத்தைச் செய்வதிலேயே நோக்கமுள்ளவர்.

இத்தகைய ஆசார்யோத்தமனைப் பெற்று இப்போது இழந்தேன். இனி அத்தகைய வள்ளலை என்று எங்குப் பெறப் போகிறேன்?

---

(2)

[உத்தமமூர் வித்வான் ஸ்ரீ உப. வீரராகவாசார்ய ஸ்வாமி, திருப்பதி]

[illegible] 1.

[illegible] 2.

[illegible] 3.

[illegible] 4.

[illegible] 5.

[illegible] 6.

[illegible] 7.

[illegible]

[illegible]
[illegible] ‖ 8.

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ‖ 9.

[illegible]
[illegible]
[illegible] ‖ 10.

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ‖ 11.

[illegible]
[illegible]
[illegible] ‖ 12.

---

(3)

[சுண்டப்பாளயம் வித்வான் ஸ்ரீ உப. வி. ஸ்ரீநிவாஸாசார்ய ஸ்வாமி]

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] ‖ 1.

[illegible] ।
[illegible] ‖ 2.

[illegible] ‖
[illegible] ‖ 3.

[illegible] ।
[illegible] ‖ 4.

[illegible]
[illegible] ।
[illegible]
[illegible] । 5.

[illegible]
[illegible]
[illegible]
[illegible] 6.
[illegible]
[illegible]
[illegible]
[illegible] 7.
[illegible]
[illegible]
[illegible]
[illegible] 8.
[illegible]
[illegible] 9.
[illegible]
[illegible] 10.
[illegible]
[illegible]
[illegible]
[illegible] 12.
[illegible]
[illegible] 13.
[illegible]
[illegible]

---

(4)

[மதுரைத் தமிழ்ச் சங்க வித்வானும் செந்தமிழ்ப் பத்திரிகை உதவிப் பத்ராதிபருமான ஸ்ரீ. உப. T. K. ராமாநுஜய்யங்கார் ஸ்வாமி]

ஞானு னுட்டான நலம்வாய்ந்து நான்மறையோர்
கோனுகி நின்ற குணச்சௌ மியமூர்த்தி
தானே பலகலையும் தந்தெமையிங் காளாது
வானேற வைத்தமால் வன்கண்மை மிக்கோனே. (1)

நன்றுபுரி கோட்டியூர் நான்மறையோர் நாயகனே
துன்றுபுகழ்ச் சௌமியப்போர்த் தூயோய் குணக்கடலே

என்றுன் கழலிணைகண் டின்பந் திளைத்திடுவோம்
என்றுன் திருமொழிகேட் டின்புற் றிருப்பதுவே. (2)

எல்லா விதத்தாலு மேற்றமுள தர்ச்சைக்கே
யல்லாற் பரவாசு தேவற்கு மஃதுள்தோ
வல்லா யவ்வர்ச்சாவ தாரத்து மாணடிமை
இல்லாத வைகுந்த மேறியது மென்னேயோ. (3)

நல்லவிருந் தோம்புதிருக் கோட்டியூர் நான்மறையோய்
தொல்லமரர் போற்றிடநீ சூழ்விசும்பு சேர்ந்தனையோ
தொல்லமரர் போற்றிடநீ சூழ்விசும்பு சேர்ந்திடினும்
செல்லும்வா யெல்லா மெமைப்புரத்தல் செய்குவையே. (4)

உள்ளத் துறவும் ஒழுக்கநெறி மேம்பாடும்
தெள்ளத் தெளிந்துணர்ந்து தேசுமிகு சீர்மதியும்
பள்ளத்துப் பாய்புனல்போற் பத்திமையும் வாய்ந்துயர்ந்த
வள்ளற் பெருமானை வாயார வாழ்த்துவமே. (5)

---

(5)

[ஒப்பிலியப்பன் ஸந்நிதி, வங்கீபுரம், நவநீதம் ஸ்ரீ ராமதேசிக தாஸன்.
சிரோமணி: வித்துவான், போர்டு ஹைஸ்கூல், சோழவந்தான்]

இரங்கற்பா

நினைக்க நேர்படின் நெஞ்சம் நெகிழும்
நவிலப் புகினும் நாத்தடு மாறும்
வரையத் தொடங்கின் மறுத்திடு மென்கை
என்மனத் துன்ப மெவ்வா றுரைப்பேன்
வாளா விருப்பினும் வளருமே என்துயர்
பொருப்பன வல்லற்குப் போக்குவீ டாகப்
பெருக்கி யேதேனும் பிதற்றிடல் கடனும்
பாவலர் பல்லோர் பரவுநன் னாடு
மேவுநன் மாண்பு மிகுந்திடுந் தேயம்
பாண்டிநன் னாட்டிற் பகரரு சிறப்பின்
நீர்வளம் நிலவளம் மிக்கு வானவர்
ஆர்வமோ டமரு மரும்பெருந் தலமாய்
நாட்டினுக் கணியாய் நன்னலந் தருவதாம்
கோட்டியூ ரென்னுங் கோதறு நகரினில்
பட்டர் பிரானும் மங்கையர் கோனும்
மட்டறு காதலின் மகிழ்வுடன் பாடும்
பங்கயக் கண்ணன் பதகம லத்துத்
தங்கிய நெஞ்சினர் சாது கோட்டியுள்
அளக்க லாகா வறிவுச் செல்வும்

துளக்கமில் நிலையுந் துலங்குபுண் ணியனும்
சுந்தரக் கோவலப் பெயருறு வேதியற்(கு)
அந்தரத் தோரு மதிசயிக் கும்வணம்
நலமிகு புதல்வனுய் நாட்டினர் மகிழத்
தலத்தினிற் ருேன்றிய சௌமிய நாரண!
கண்ணனைப் பெறவவ னன்னைதா னென்ன
எண்ணருந் தவத்தினை யியற்றின ளோவென
விட்டுசித் தன்னுளம் வியப்புற் ருற்போல்
மட்டிலாத் தவத்தினள் மதிமிகு நின்னனை
எனக்கரு திப்பல ரேமமிக் கெய்தினர்
தனக்கென வாழாப் பிறர்நலம் பேணுவோய்!
எதிர்நிகழ் கழிவினு மெழிலுறு நின்பால்
கதிர்மிகு சுடரும் காண வரிய
உறமும் நிற்பினும் ஒழிவறு தண்மையும்
பெறலரும் பெருமையும் பேணுவார்க் களிய
வதனங் காட்டி மதுர மொழியினை
இதமுற வுரைக்கு மெளிமையு மெண்ணிச்
சௌமிய நாரணப் பெயருனக் கிட்டனர்
இளமையிற் கலைகளை யிழுக்கறக் கற்கநீ
வளமிகு மதியுடன் வயங்கி நின்றனை
சாமா னியசாத் திரமனைத் துந்நீ
கூரிய வறிவின் கோதறக் கற்றனை
இக்கலை யாவு மியம்பருந் தொகையாம்
தக்க பயனைத் தராவெனக் கருதி
நிறைகுண வாசான்பால் நீடு பணிந்து
மறைமுடிக் கலைதனை மாண்புறக் கற்றனை
முகில்கருங் கடலின் முகந்த நீரைச்
சகதல முழுதும் தரித்திட நினைந்து
பருகு நீரா யுதவல்போ லாசான்
அருகினில் நீகற்ற அரும்பொரு ளனைவரும்
மருளற வறிந்து வாழ்ந்திட நினைத்தனை
கடலினு மிகுத்த காதலோ டுன்னடி
திடமுடன் பணிந்துநிற் சீடரா யவர்பால்
அருள்புரிந் தவரை யளித்திட வெண்ணி
இளகிய நெஞ்சுட னின்னமு தினியநல்
லாசா னுரைபொதி யரும்பொரு ளவர்க்குக்
கூசா துரைத்துக் கொடுமனந் தீர்த்தனை
பேசற் கரிய பெருமை பெற்ருேன்
காசறு குணக்கடல் தூப்புற் காவலன்

நியாச விம்சதி யெனுமுயர் நூலில்
ஆசா னிலக்கண மறைந்திடுங் காலைப்
பேசிய நற்குணம் பீடுற வுன்பால்
வாச மிகுத்து வாழ்வது கண்டவர்
உன்னடி பணிந்தே யுய்ந்தனர் பல்லோர்.
சான்றோர் நிறைந்திடுஞ் சபையி னடுவே
குறிய மேனியுங் கொண்டபொன் னிறமும்
தூய வாடையும் சோதிநன் னூலும்
உரத்தி லிலகு முயர்துழாய் வடமும்
தாமரைக் காழும் தண்ணருள் நயனமும்
விளங்கிட இன்னகை யரும்பு முத்தோ(டு)
அமுதினு மினியசொல் லள்ளிநீ சொரிய
அமுதக் கடலு ளழுந்திநின் றவையோர்
மறைமுடிக் குருநின் வடிவுகொண் டாங்கு
அருள்வதா நினைந்தே அகமகிழ் வுறுவர்
'உருவமே உயர்வினை யுணர்த்துமே' யென்னும்
மறைக்கெடுத் துக்காட்டு நீயெனக் கண்டோம்
நின்னுடல் வாடி நெகிழ்ந்ததே யாயினும்
துன்னுசீ ராசான் தூமொழிச் சுவைதனை
நல்கிய சீடர்க்கு நன்மை பயக்கச்
சொல்லுங் காலை சோர்வு நீங்கி
இளம்பரு வந்தனை யெய்தினாற் போல
விளங்கு முறையை வியந்தன ரனைவரும்
கச்சியில் தண்கா விளக்கொளி யதனில்
மெச்சற் கரிய வேதநல் மௌலி
ஆசான் பிறந்த அரும்பெருந் தலத்தவ்
வாசா னருளிய வரங்க னடிநிலை
யாயிர நூலி னமைவுறு விழவில்
ஆயிரங் கவிப்பொரு ளன்பினீ யனைவர்க்(கு)
உரைத்திடு முறைகண் டுடனி ருந்தவர்
பெருவியப் பெய்தினர் பேருவப் புற்றனர்
மந்திர மனைத்தினும் மாண்புமிக் கொளிரும்
துயத்தினி லுனக்குள தூயபத் தியினால்
துயம் விளங் குந்திருப் பதிமது ராந்தக
நகரினை நல்கிநீ நல்லிடங் கொண்டனை
சோதிநன் னாட்டிற் சுடர்மிகு நாதன்
ஆதரம் பெருகநீ யாற்றிடும் பணியை
ஏற்க நினைந்தே யேற்றநாள் கண்டு
சித்திர பானுவாம் சீருறு மாண்டில்

மாசித் திங்கள் தேய்பிறைச் செவ்வாய்
ஏகா தசியாந் திதியி லழைத்தான்
ஏற்றதை வானில்நீ இளவர சன்பால்
போற்றருந் தொண்டு புரிந்திடத் துணிந்து
சுத்த சத்துவச் சோதிநா டெய்தினை
பத்துடை யடியரா மெமைப்பிரிந் தெங்குநீ
செல்லினு மெம்முளம் சிந்தியா தோவுனைச்
சொல்லருங் காதற் சுரந்திடு மெம்மனம்
உருகா வண்ணமு முன்பிரி வுத்துயர்
துணிவுடன் பொறுக்கும் வண்ணமும்
திருவிண் ணகரான் திருவருள் புரிக.

—

(6)

[கருடபுரம் ஸ்ரீ. உப. தி. ஈ. திருமாலாசாரியர், வ்யாகரண சிரோமணி, மாம்பலம்.]

[illegible]
[illegible] |
[illegible]
[illegible] ‖ 1.

[illegible] |
[illegible] ‖ 2.

[illegible]
[illegible] |
[illegible] ‖ 3.

[illegible]
[illegible] |
[illegible]
[illegible] ‖ 4.

[illegible]
[illegible] |
[illegible] ‖ 5.

[illegible]
[illegible] |
[illegible]
[illegible] ‖ 6.

[illegible] 7.

[illegible] 8.

---

(7)

[ஸ்ரீ. உப. எ. ராமஸ்வாமி ஐயங்கார், பொன்மலை]

உயர் திருப்பாற்கடலை ஒரு பூனை தன் நாவினால் நக்கி வற்றிடச் செய்ய நினைப்பதுபோல், அடியேனும் ஸ்வாமி விஷத்தில் சில வார்த்தைகள் சொல்லத் துணிகிறேன்.

"ஒருநாள் பழகினும் பெரியோர் கேண்மை இருநிலம் பிளக்க வேர் வீழ்க்குமே" என்பதுபோல் அடியேன் ஸ்வாமியினிடம் பெரும் பாக்கத்திலும், நம் 42-வது பட்டம் ஸ்ரீ அழகியசிங்கரால் ஸ்தாபநம் செய்யப்பட்டுள்ள மதுராந்தகம் ஸம்ஸ்க்ருத காலேஜ் க்ருஹ ப்ரவேச உத்ஸவத்தின்போதும், 'முத்தி தரும் நகரேழில் முக்கியமாம் கச்சி' என்று நம் தேசிகனால் உகந்ததும் '**नगरीषु कांची**' என்று சொல்லப்பட்ட உயர்ந்த க்ஷேத்ரமான அத்திகிரியில் மிக ஔதார்யத்தோடு நடத்திய மாலோல ஸபையின் இரண்டாவது வார்ஷிக உத்ஸவத்தின் போதும், ரொம்ப நெருங்கிப் பழகும்படியான பாக்யம் கிடைத்தது.

அக்காலத்தில் என் ஸ்நேஹிதோத்தமரும் ஸ்வாமியின் சிஷ்யருமான புதுக்கோட்டை எ. ஸ்ரீநிவாஸ ராகவன் (M.A.) என்பவரும் அடியேனும் ஸ்வாமியுடன் பேசியதை நினைத்தால், நம் வைணவ உலகத்திற்கும் ஆஸ்திக தர்மத்திற்கும் இத் துர்த்தசை வரவேண்டாம். '**दैवमपरिहार्यम्**' என்பதை நினைத்து ஒருவாறு ஸமாதாநமடைய வேண்டும்.

ஸ்வாமியின் செவிக்கினியவும் ம்ருதுவானவுமான வாக்யங்கள் அடியேனுடைய நெஞ்சிலேயே இருக்கின்றன. ஸ்வாமியின் மறைவினால் உண்டான நஷ்டம் ஈடுபடுத்த முடியாதது. ஸ்வாமி அநுஷ்டித்தபடி நம் ஸம்ஸ்க்ருத கலாசாலையிலுள்ள மாணவர்களும் உபாத்யாயர்களும் அம்மஹானைப் பின்பற்றி அநுஷ்டாநபரராக நடந்துவந்தால் ஒருவாறு நம்மவர்களுக்கு ஶாந்தியும் க்யாதியும் ஏற்படலாம். ஶரண்யன் க்ருபை பண்ணவேணும்.

---

(8)

[திருப்பூந்துருத்தி ஸ்ரீ. உப. வ. க்ருஷ்ணஸ்வாமி ஐயங்கார், பெங்களூர்.]

1. தேட்டரிய பெருஞானத் திருவுடையார் குலம்விளங்கத்
தோன்றிச் சிங்கர்
நாட்டியநற் கலைக்கழகம் நனிசிறக்கப் பணிபுரிந்து
நலத்தான் மிக்க
வீட்டினல மறிகுதுமென் றிவணீத்துப் பெருவீடு
சென்று னந்தோ!
கோட்டிபுரம் சௌமியநா ராயணனென் றிவ்வுலகங்
கூறும் பெம்மான்.

2. பொறையென்பார் மறையுரைக்கும் பொருளென்பா ரருளென்
பொற்பு மிக்க [பார்
வறிவென்பார் புகழ்மலிந்த வன்பன்றே யாமின்றிங்
கிழந்தே மென்பார்
குறையொன்று மில்லாத கோட்டிநக ரந்தணர்தங்
கோமா னின்றிங்
கிறைவன்ற னகல்விசும்பில் முடிசூடும் பெருவாழ்வுக்
கெழுந்தா னென்றே.

3. அன்னேயோ விவ்வுலகி லருங்கலியா லறநெறிக
ளழியா வண்ணம்
மன்னுமற நூல்பலவும் மாதவனுர் சரிதைகளும்
மற்று மெல்லாம்
பன்னரிய வினிமையொடும் பகர்ந்திடுவோய் யாம்புருகி
மகிழு மாறு
பொன்னகர்நீ சென்றனையால் புவிப்புகழாற் பயனிலையென்
றெண்ணி ஞயோ?

4. சொல்லுரையில் வல்லோய்நீ சுருதிகளுந் தமிழ்மறையுஞ் 2|0||3
சூழ்ந்த வற்றை
வல்லுநரு மல்லாரும் மகிழ்ந்திடவே விளக்கிடுவாய்
மறையோ னேநீ
நல்லவருக் கிவ்வுலகில் நன்மையிலை பேரின்ப
நாட்டி னுக்கே
செல்லுதலே நல்லதெனச் சிந்தித்தோ யிவணீத்துச்
சென்றிட் டாயே.

5. தூரியங்கள் முழக்கினவோ தோரணங்கள் நிரைத்தனரோ
தொழுது போற்றிச்
சீரியநற் றேவர்கடா மிருப்பிடங்கள் வகுத்தனரோ
தேவர் கோக்கள்

வேரியந்தார் முடிசாய்க்க விண்மடவார் வாழ்த்தெடுப்ப
வேத நாவர்
ஆரியநின் னடிகழுவி யந்தமிலா வணிநகர்க்கே
யழைத்த ஞான்றே.

6. நிற்கண்ட மாதவனுர் நேமிதிகழ் கைந்நீட்டி
நின்னை யேற்றென்
கற்கண்டே வாவெனத்தங் கனிவுடனே யமுதொழுகு
காதல் மிக்க
சொற்கொண்டங் கழைத்தனரோ சூரியர்க ளிசைந்திடுநற்
றெண்டு பூண்டு
பொற்குன்ற மனையகோயிற் புகுந்தினிது மகிழ்ந்தாயோ
புரையி லையா !

7. அஞ்சுவணப் புட்பாக னணிதிகழுந் திருத்தவிசி
லமர்ந்து நின்னைக்
கஞ்சமலர்க் கண்ணிணைகள் களித்திடவே பருகிடுவான்
போல நோக்கி
யஞ்சொற்க ளமுதொழுக நீயுரைக்க வகமுருகி
யன்பு மிக்குத்
தஞ்சிறுவர் குதலைமொழி கேட்டுகக்குந் தாயேபோற்
களித்திட் டானே.

8. விண்ணகத்தை விளக்கிடுவான் விழைந்தாலு மெமைநீத்து
விசும்புற் றாலும்
மண்ணகத்தே நின்னொளியை யாங்கண்டு மகிழ்வதிலோ
ரைய முண்டே?
கண்ணகன்ற மாஞாலங் களித்திடவே யுதயஞ்செய்
கதிரோன் போலும்
விண்ணரிவை நுதல்செறிய விலகுமணிப் பூண்போலும்
விளங்கு வாயே.

வெண்பா

9. இற்றைநா ளிவ்வுலகை நீநீத்துச் சென்றாலும்
வெற்றுடம்பு சென்றதலால் வேறில்லை—மற்றுனது
மன்னும் புகழுடம்பை மாஞால முள்ளளவு
மின்னிலத்திற் காண்போ மினி.

---

(9)

[தோட்டாலம் வித்வான் ஸ்ரீ உப. வேணுகோபாலாசார்ய ஸ்வாமி]

[illegible] ‖ 1.

[illegible] ‖ 2

[illegible] ‖

[illegible] ‖

---

(10)

[தமிழ் வித்வான் ஸ்ரீ. உப. நாராயணய்யங்கார் ஸ்வாமி, மதுரை]

ஸ்ரீ. உப. வே. திருக்கோட்டியூர் ஸ்வாமியின் பரமபத ப்ராப்தி, ஸ்ரீவைஷ்ணவ ஸமூஹத்துக்கே ஶோசநீயமானது. அவருடைய ஜ்ஞாந ஶீலாதி குணங்களெல்லாம் உயர்ந்தோர் பலரும் எழுதும் ஶோசந பத்ரங்களால் அறியலாம். அவை யெல்லாம் ஒருபடியே பேசுதலால் உண்மையுள்ளனவே. அவற்றை அடியேனு மெழுதுதல் மிகையாகு மென்று ஒழித்தேன். இவர்க்குள்ள ஜ்ஞாநத்தாலும் ஸாமாந்ய விசேஷ சாஸ்த்ராப்யாஸ பலத்தாலும் பல க்ரந்த விசேஷங்கள் செய்யத்தக்க ஸாமர்த்யம் இருந்தும் அவைகளைச் செய்யாமைக்குக் காரணம், அவற்றின் பல ரூபமான ப்ரவசநத்தை ப்ரதாநமாகப் பற்றினமையும் கர்மாநுஷ்டாநங்களில் காலங் கழிந்துவிடுகையுமாம். இவர், வேஷ பாஷா ஸ்வரூபங்களால், ஶிஷ்டாக்ரேஸரரான ஸ்ரீ வைஷ்ணவர் இருக்கும் இருப்புக்கு மாத்ரிகை (படிக்கலம்) ஆக விளங்கினவர். இவரது பிற்கால விஶ்லேஷம் ஆற்றாது வருந்தும் வருத்தம் நமக்கு ஒரு பக்கம் இருக்கவும், முற்கால விஶ்லேஷத்தை நெடுங்காலம் ஆற்றிருந்து வருந்திய எம்பெருமானும் இவரும் இப்போது கிடைக்கப்பெற்ற ஸம்ஶ்லேஷத்தால் ஈறிலின்பத் திருவெள்ளம் மூழ்குதல்கொண்டு, நாமும் ஆறுதலடைவோமாக.

(11)

[ஸ்ரீ. உப. எம். டி. துரைஸாமி அய்யங்கார் நியமனப்படிக்கு, எஸ். வி. க்ருஷ்ணஸாமி அய்யங்கார், பெரம்பூர், மதராஸ்]

ஸ்ரீ. உப. கோஷ்டீபுரம் ஸ்ரீதேசிகதர்சன விஜயத்வஜ மஹா வித்வான் ஸ்ரீ. உப. ஸௌம்ய நாராயணார்ய மஹாதேசிகன், நலம் அந்தமில்லதோர் நாட்டுக்கு எழுந்தருளிவிட்டபடியால், அஜ்ஞானமாகிற இருட்டு மூடிவிட்டது என்பதற்கு ஸந்தேகமேயில்லை. இந்த ஸ்வாமியின் ப்ரபாவத்தை யதாவத்தாக அருளிச்செய்யவேண்டுமானால், ஸ்வாமி ஸ்ரீதேசிகன் பாதுகாஸஹஸ்ரத்தில் 'நிஶ்ஶேஷஶேஷஸ்வமயம்' என்று அருளிசெய்திருக்கிற ப்ரகாரம் பகவான் ஸ்ரீ ரங்கநாதன்தான் ஒருவாறாய்ச் சொல்லி முடிக்கலாம். அப்படியிருக்க, அடியேனைப் போன்ற மூடன் இந்த ஸ்வாமியின் குணாதிசயத்தைச் சொல்லபுகுவது ஸாஹஸ க்ருத்யந்தான். ஆனாலும் சொல்ல துணிவது எக்காரணத்தால் என்றால், ஸ்வாமியின் நிர்வ்யாஜமான வாத்ஸல்ய குணமே அடியேனை உபவசீகரோதி. இது நிற்க ஸ்வாமியை யாராவது தெரிந்தோ தெரியாமலோ ஸேவித்திருக்கும் பக்ஷத்தில், அவர்களுக்கு 'உபேத்ய ஸ்ருயதி நவ்யதா ஸயா' என்கிற கணக்கிலே மோக்ஷம் ஸித்தம். இந்த ஸ்வாமி, நம் ஸ்வாமி தேசிகனைபோல, தன்னையே தமக்கு தநமாகக் கொண்டவர். இப்படி ஸ்வாமி தேசிகன்தான் மறுபடியும் திருக்கோட்டியூர் ஸ்வாமியாக அவதாரம் பண்ணியிருந்தார் என்பது அடியேனுடைய உண்மையான கொள்கை. ஆகையினால் 'ஸுஸஜ்ஜாவிஶுவ,' 'முக்கிய மந்திரங் காட்டிய' ஸ்ரீ ஸூக்திகளில் சொல்லப்பட்ட ஆசார்ய குணபூர்த்தியுள்ள இந்த மஹாதேசிகனை யார்கொண்டுபோற்றினும் அம்மால் பதத்தை அடைவிக்கும் என்பதை, 'ஸத்யம் ஸத்யம் புநஸ்ஸத்யம்' என்கிற ப்ரகாரம் த்ருடமாய்ச் சொல்லுகிறேன்.

---

(12)

[ஸ்ரீ அஹோபில மடம் ஸ்ரீகார்யம் வித்வான் அம். நரஸிம்ஹாசார்ய ஸ்வாமீ.]

ஶ்ரீவத்ஸாந்வயஜ நவாஸ்தூரஸௌம்யபித்ரு நாராயணாபிதய ஶ்ரீமத் விஶ்வஜிதே: | பாதம் ஶரணாகதம் நிதராம் நமஹோபி ஶோ வா விஶேஷஸ்ய ஸஹதாம் கவிதாம் உக்தி: ‖ 1.

ஈயாதிதிஸ்ஸாஷ்டிவிஶாலஸௌம்ய: ஸௌமந்யவீமா ஶ்ரீதேஹாஷணோ க: | நிர்வீர மஸ்ஸுதந ஸௌம்ய நாராயணாபியா நோர வித: ப்ரவாவாழு ‖ 2.

வாஷீ வரீயாநு விவாயா ம ஜ ம ஜே ரா வாஷீதிஸுதாக விவாமாயஜுவஷீ | விவித்யமோது விரோ ஶோஷமயீவஷாநு: கவநஸ்ஸுஶேவ: ‖ 3.

காவோவவளப்ரதிஹாவ்யஹாவாநு ராயாதாஜஹா நதரோதி ராவீ | கஞ்சஸ்ஸுநாராயணஸௌம்யஸுரேம மாநோதீஷொஸ்ஸும் ககாஹி ப்ரதீவாழு ‖ 4.

த்வத்தோ ஜ்யேஷ்ட்யம் த்வயி ஜ்ஞாநம் த்வயைவ ஹ்ருதி ஜ்ஞதா |
ஸௌஶீல்யம் காருண்யம் வித்வாம்ஸ்த்வாமி ஸ்வாமிநதா த்வயி || 5.

த்வய்யாஜாநஶ்ரேஷ்ட்யம் த்வயி தேவ்யாஶ்ரிதஜ்ஞதா | ஸமுத்ஶாஸ்த்ர
ஜ்ஞதா த்வாமி த்வயி ஜ்ஞாநதீபவர்தநம் ||6.

ஸதவத்விஷயே ஜ்ஞாதா ஸ்வஸ்தி ஸ்ரீமாஷ்ட்யவாரம் | ரஹஸ்ய
த்ரயஜ்ஞ ஸ்வஸ்தி கோபி ஶீதாம்ருதஸாரவித் || 7.

பாராணகாஶ்யா: கேசித் கேசிச்சாஸ்த்ரவிசக்ஷணா: |
யாரணே நிபாணா: கேசித் வோயதே பட்வ: பரே || 8.

ஸதத்த்வம் ஸாந்த்ராத்யஸௌ நாராயணே ஸதா | ஸம்
ஶ்ரித்ய வஸதி ஸ்ம ஸ்வஸ்தி தேஶஸ்மின் பரம் பத்ம் || 9.

வித்யாவிநயஸௌஹார்த்ய ஔதார்ய க்ஷாந்தி ஸ ஸகுணா: | நிரா
லம்பா விஹாஸ்யந்தி ஶிஶாவஸ்ய விஶிஶாவஸ்ய ச || 10.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

செய்திகள்

ஸமீபத்தில் ஸ்ரீ கோஷ்டிபுரம் ஸ்வாமியின் வியோகத்தால் வைஷ்ணவ உலகமே ஶோக ஸாகரத்தில் மூழ்கியிருக்கும் தருணத்தில், திடீரென்று தஞ்சையின் கண் திலகமாயும், ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயத்திற்கு ஓர் தீபமாயும் விளங்கிவந்த ஸ்ரீ உ. வே. T. கோதண்டராம அய்யங்கார் ஸ்வாமி பரமபத ப்ராப்தி அடைந்தது அதிதுக்ககரமான ஸம்பவம். தென்னாட்டிலேயே ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ப்ரதாயஸ்தர்களோ, அல்லது மற்ற எந்த ஸம்ப்ரதாயத்தைச் சேர்ந்தவர்களோ, ஸ்ரீ கோதண்டராம ஐயங்கார் ஸ்வாமியை அறியாதவர் யாரும் இலர் என்பதில் ஸந்தேஹமில்லை. ஸ்ரீ ஸ்வாமியினுடைய குணாதிசயங்களைப்பற்றிப் புகழாதார் கிடையாது. தஞ்சையில் ப்ரபல வக்கீலாக இருந்து ஏராளமான த்ரவ்யார்ஜநம் செய்து அதி உந்நத ஸ்தாநத்தை அடைந்திருந்தார். இருந்தும் ஸ்வாமியினுடைய ஸௌலப்யத்திற்கு கிஞ்சித்தேனும் குறைவு கிடையாது. ஸ்வாமி, ஓர் பதவியில் இருந்து கொண்டு ஸத்யத்தையும் சீலத்தையும் காப்பாற்றி வந்தது மிகவும் போற்றத்தக்கது.

தம் ஐஶ்வர்யம் முழுவதையும் பகவத் பாகவத விஷயங்களிலேயே உபயோகப் படுத்தி அதனால் கடைசி காலத்தில் கிஞ்சித் ஆகிஞ்சந்யத்தையும் அடைந்தார் என்றால் அது மிகையாகாது. பரோபகாரார்த்தமாகவே தம் உடல் பொருள் ஆவி மூன்றையும் விநியோகம் செய்தவர் அபூர்வ வ்யக்தி இந்தஸ்வாமி. இப்படிப்பட்ட வ்யக்தியை இம்மண்ணுலகு இழந்தது. விண்ணுலகு பெற்றது.

ஸ்வாமியினுடைய பிரிவை ஆற்றாத இந்நகர வாஸிகள் தஞ்சை ஸ்ரீவைஷ்ணவ ஸபை ஆதரவில் நடந்த ஒரு பொதுக்கூட்டத்தில் தங்கள் அநுதாபத்தைக் காட்டி ஓர் தீர்மாநம் நிறைவேற்றினார்கள். ஸ்வாமியினுடைய ஞாபகார்த்தமாக ஏதாவது ஒரு ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று தீர்மானித்து அதற்கு வேண்டிய முயற்சிகளையும் செய்து வருகிறார்கள்.

K. S. நரஸிம்ம ஐயங்கார், வக்கீல்,
ஸ்ரீ வைஷ்ணவ ஸபை காரியதரிசி, தஞ்சை.

श्रीः

श्रीमते लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः

योऽन्तः प्रविश्य मम वाचमिमां प्रसुप्तां
सञ्जीवयत्यखिलशक्तिधरः स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन्
प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

ஸ்ரீ அஹோபில மடம்
ஸம்ஸ்க்ருத பாடஶாலை
மதுராந்தகம்.

சென்ற 1942-வது வருஷம் ஜூலை மாஸத்தில், ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய அநுக்ரஹத்தையும் ஸ்ரீ அழகிய சிங்கருடைய ஆஶாஸநத்தையும் முன்னிட்டு, ஸ்ரீ மதுராந்தகத்தில் "அஹோபிலமடம் ஸம்ஸ்க்ருத தர்ம பாடசாலை" ஆரம்பிக்கப்பட்டது. அது, பத்து மாஸ காலமாக ஸ்ரீ ஶரண்யனுடைய கடாக்ஷத்தால், நிர்விக்நமாக நடைபெற்று வந்து, இப்பொழுது கோடை விராமத்திற்கு இரண்டு மாஸம் மூடப்பட்டிருக்கின்றது. மறுபடியும் வருகிற ஜூன் மாஸம் 23உ புதன்கிழமை அது திறக்கப்படும். ஶிரோமணி பாகத்திற்காகச் சென்னை ஸர்வ கலாஶாலை [யூனிவெர்ஸிடி] அதிகாரிகள் பாடஶாலையைப் பரிஶீலநம் செய்து, அது நடத்தப்படும் க்ரமங்களை ஆமோதித்துப் போயிருக்கிறார்கள். சீக்ரத்தில் அந்த அதிகாரிகளிடமிருந்து எழுத்து மூலமாக அங்கீகார பத்ரம் கிடைக்கலாமென்று எதிர்பார்க்கிறோம்.

பாடஶாலையின் அத்யக்ஷ பதவியை வஹித்துவந்த ஸ்ரீ. திருக்கோட்டியூர் ஸ்வாமி திடீரென்று பரம பதத்தை அடைந்துவிட்டபடியால், அந்த ஸ்தாநத்திற்குத் தேவனார்விளாகம் ஸ்ரீ. உப. லக்ஷ்மீநரஸிம்ஹாசார்ய ஸ்வாமி ஸ்ரீ அழகிய சிங்கரால் நியமிக்கப்பட்டிருக்கிறார். திருநக்ஷத்ரத்தில் இந்த ஸ்வாமி கொஞ்சம் குறைவாக இருந்தாலும், ஜ்ஞாநத்திலும் அநுஷ்டாநத்திலும் ஸ்ரீ திருக்கோட்டியூர் ஸ்வாமிக்குத் துல்யரே யாகையால், பாடஶாலை இதற்கு முன் எவ்வளவு த்ருப்திகரமாக நடைபெற்று வந்ததோ அவ்வளவு த்ருப்திகரமாகவே இப்பொழுதும் நடைபெற்று வருகின்றது. இவர், வயஸ்ஸில் கொஞ்சம் குறைவாக இருப்பதும் ஒரு அம்ஶத்

தில் பாடஸாலையின் ஸோபாதிஸயத்திற்குக் காரணமாகின்றது என்றே நாம் நினைக்கிறோம். ரஜஸ் தமஸ் கலந்த ஜநங்களைப் பரிபாலிக்கும் விஷயத்தில் ப்ரஸமம் க்ஷமை ப்ரிய வசநம் முதலிய வைகளுடன் கொஞ்சம் தார்ஷ்ட்யமும் சேர்ந்திருப்பது ப்ரயோஜந விஸேஷத்தை உண்டு பண்ணுமன்றோ? 'क्रोधमाहारयत्' என்கிற படி துஷ்டர்களை நிக்ரஹிக்கும் காலத்தில் கோபத்தை ஆரோபணம் செய்துகொள்ளும் வயஸ்ஸில் இவர் இருக்கிறார். அது ஒரு விஸேஷித்த லாபமே.

ஜகத்தின் க்ஷேமத்தை உத்தேஸித்து ஸ்ரீ அழகிய சிங்கரால் மிக்க ஔதார்யத்துடன் ஸ்தாபிக்கப்பெற்ற இந்தப் பாடஸாலை மேன் மேல் அபிவ்ருத்தமாகும்படி ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் கடாக்ஷித்தருள வேண்டுமென்பது நம்முடைய ப்ரார்த்தனை.

* * * *

ஸ்ரீ. உப. தி. கோதண்டராம ஐயங்கார் ஸ்வாமியின் நிர்யாணம்

தஞ்சாவூரில் சென்ற 30 வருஷங்களுக்கு மேலாக வக்கீல் உத்யோகம் செய்துவந்த கோமல் ஸ்ரீ. உப. தி. கோதண்டராம ஐயங்கார் என்னும் ஸ்வாமி திடீரென்று மார்பு அடைப்பினால் பீடிக்கப்பட்டுப் பரமபதம் அடைந்த செய்தியை இங்கு மிக்க வ்யஸநத்துடன் நாம் குறிப்பிடுகின்றோம். இந்த ஸ்வாமி, ஆங்கில பாஷையில் ஆழ்ந்த ஜ்ஞாநத்தைப் பெற்று, அதில் உயர்ந்த பரீக்ஷைகளில் நிஷ்பத்தியை அடைந்தும், நமது வைதிக ஸம்ப்ரதாயத்தில் அளவற்ற ஊக்கத்துடன் கர்மாநுஷ்டாநாதிகளைத் தவறாது பரிபாலித்து வந்தவர்களுள் ஒருவர். மேல்நாட்டுக் கல்வியினால் நமது வைதிகாநுஷ்டாநங்களுக்கு ஒருவித தடையும் ஏற்பட வேண்டியதில்லை என்பதற்கு இவருடைய வாழ்வு பெரியதொரு நிதர்ஸநமென்று சொல்லலாம். இவருடைய வைதிக ஸ்ரீயைப் பார்த்து ஸ்ரீவைஷ்ணவ ஸமூஹத்தினர் இவரிடம் எவ்வளவு பஹுமான புத்தியைச் செய்து வந்தார்களோ, அவ்வளவு பஹுமதியை லௌகிகர்களும் இவருடைய ஆத்ம குணத்தைப் பாராட்டிப்போற்றி வந்தார்கள். தஞ்சாவூரில் இவர் காலத்தில் ந்யாய ஸ்தல அதிகாரிகளாக வந்த ஜட்ஜுகளுள் இவருடைய சட்ட ஜ்ஞாநத்திலும் ஆர்ஜவத்திலும் ஈடுபடாதவர் ஒருவரும் இல்லையென்றே சொல்லலாம். சற்றேறக்குறைய இருபது வருஷங்கட்கு முன் நம் நாட்டில் ப்ரபலமாக நடைபெற்று வந்த ஸ்ரீ அஹோபில மடத்து ஸிஷ்ய ஸபை

யில் இவர் ஒரு முக்ய அங்கத்தினராக இருந்ததுடன், அந்த ஸபை இருந்த வரை அதன் உபஸபாத்யக்ஷர்களுள் ஒருவராகவும் இருந்து, அதற்குப் பரமோபகாரத்தைச் செய்து வந்தார் என்பது அந்த ஸபையில் ஸம்பந்தம் பெற்ற எல்லாருக்கும் தெரிந்த விஷயம். தமக்கு ஸ்வரூப ப்ராப்தமான ஸ்ரீவைஷ்ணவ ஸமூஹ கைங்கர்யத்தில் மந: பூர்வமாய் அந்வயிப்பதும், தம்மால் இயன்றவளவில் அதை நிறைவேற்றி வைப்பதுமே அவருடைய முக்ய நோக்கங்களாக இருந்தன. அப்படிப்பட்ட வ்யக்தியை நாம் இழந்துவிட்டோம்; அவர் பரமாநந்தமான நித்ய பகவத் கைங்கர்யத்தை அடைந்து ஸ்ரீவைகுண்டத்தில் நித்யஸூரிகள் போல ப்ரகாஶித்துக்கொண்டிருக்கிறார் என்பதில் ஆக்ஷேபமில்லை. அவருடைய வியோகத்தால் வ்யஸநிக்கும் அவரது குடும்பத்தார்க்கு நமது ஹார்த்தமான அநுஶோசநத்தை இதன் மூலமாக நாம் அறிவிக்கின்றோம்.

* * * *

சந்தாதாரர்களுக்கு ஒரு விஜ்ஞாபநம்

ஒவ்வொரு மாஸத்திலும் நமது சந்தாதாரர்களுள் சிலரிடமிருந்து தமக்கு ஸஞ்சிகை கிடைக்கவில்லை என்று கடிதங்கள் வருகின்றன. அப்படிக் கடிதம் அனுப்புகிறவர்களுக்கு நாம் தவறாது மறுபடியும் ஸஞ்சிகைகளை அனுப்பி வருகின்றோம். மேல் விலாஸம் எழுதுவதிலும், ஸஞ்சிகைகளைத் தபால் ஆபீஸுக்குக் கொண்டு போய்ச் சேர்ப்பதிலும், நாம் மிக்க ஜாக்ரதையுடன் இருக்கிறபடியால், ஸஞ்சிகைகள் தவறினால், அந்தத் தவறுதல் வேறு காரணங்களாலேயே ஏற்படவேண்டுமென்று நாம் நினைக்கிறோம். சந்தாதாரர்கள் தங்கள் தங்கள் தபால் ஸேவகர்களிடம் தமக்கு வரும் தபால்களைச் சரிவரச் சேர்ப்பிக்கவேண்டுமென்று யதோசிதம் ஜ்ஞாபித்தால் ஸௌகர்யமாக இருக்கும். ஒவ்வொரு மாஸத்திலும் ஸஞ்சிகைகள் 5-ம் தேதிக்குள்ளாகவே வெளி வருகிறபடியால், 6 அல்லது 7-ம் தேதிக்குள் ஸஞ்சிகை கிடைக்காவிட்டால் உடனே சந்தாதாரர்கள் க்ருபை செய்து அதை நமக்குத் தெரிவிக்கவேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம். சந்தாதாரர்கள் ப்ரக்ருத விஷயமாகவோ வேறு விஷயமாகவோ நமக்குக் கடிதம் எழுதும்பொழுதெல்லாம், தமது பெயரையும் விலாஸத்தையும் விவரமாகக் குறிப்பதுடன் தமது ரிஜிஸ்தர் நம்பரையும் குறித்து அனுப்பவேண்டுமென்றும் ப்ரார்த்திக்கிறோம்.

अजीर्यताममृतानामुपेत्य जीर्यन्मर्त्यः क्व तदास्थः प्रजानन् ।
अभिध्यायन् वर्णरतिप्रमोदाननतिदीर्घे जीविते को रमेत ॥ २९

यस्मिन्निदं विचिकित्सन्ति मृत्यो यत्सांपराये महति ब्रूहि नस्तत् ।"
योऽयं वरो गूढमनुप्रविष्टो नान्यन्तस्मान्नचिकेता वृणीते ॥ ३०

इति प्रथमा वल्ली ॥

---

29. [ப - ரை] **जीर्यन्** - கிழத்தனத்தால் [மரணம் முதலியவைகளால்] பீடிக்கப்படும், **मर्त्यः** - மநுஷ்யன், **प्रजानन्** - விவேகியாக இருப்பானேயானால், **अजीर्यतां अमृतानाम्** - ஜரை யற்றும் மரணமற்று மிருக்குமவர்களுடைய [முக்தாத்மாக்களுடைய], **उपेत्य** - [ஸ்வரூபத்தை] அறிந்த பிறகும், **तदास्थः क्व** - அதில் ஆசையுள்ளவனாக [ஜரை மரணம் முதலிய உபத்ரவங்களுடன் கூடியிருக்கும் விஷய ஸுகங்களில் ஆஸ்தையுள்ளவனாக] இருப்பனா? **वर्णरतिप्रमोदान्** - [ப்ரஹ்மத்தின்] ரூப விசேஷங்களையும் [ப்ரஹ்மபோகத்தால் ஜநிக்கும்] ஆநந்த விசேஷங்களையும், **अभिध्यायन्** - நன்றாக நிரூபித்துத் தெரிந்துகொண்ட, **कः** - எவன், **अनतिदीर्घे जीविते** - அத்யல்பமான ஆயுஸ்ஸில் [அத்யல்பமான இந்த ஐஹிக போகங்களில்], **रमेत** - ப்ரீதியுள்ளவனாக இருப்பான்?

वर्णरतिप्रमोदान् - 'வர்ணம்' என்பதற்கு 'ரூபம்' என்பது பொருள். ப்ரஹ்ம லோகத்தில் பகவானுக்குக் கோடி ஸௌர்யன் உதித்தாற்போல் ரூபம் உண்டென்றும், நித்யர்கள் முக்தர்கள் இவர்களும் அப்படிப்பட்ட ரூபத்துடன் கூடியிருக்கிறார்களென்றும் சாஸ்த்ரங்கள் சொல்லுகின்றன. அம்மாதிரியான ரூபங்களைப் பார்ப்பது முதலானதால் பற்பல ஆநந்த விசேஷங்கள் ஜநிக்கும். அவைகளின் ஸ்வரூபத்தை அறிந்தவனுக்குக் குத்ஸிதமாயும் அஸ்திரமாயுமுள்ள விஷய ஸுகங்களில் ரதி ப்ரமோதங்கள் எவ்விதம் ஜநிக்கும்?

---

30. [ப - ரை]. **मृत्यो** - ஹே ம்ருத்யுவே! **महति** - பெரியதான, **यस्मिन्** - எந்த, **सांपराये** - பரலோக ஸாதந வ்யாபாரத்தில் [அதாவது: முக்தாத்ம ஸ்வரூபத்தை அறியும் விஷயத்தில்], **यदिदं विचिकित्सन्ति** - [பெரியோர்களும்] யாதொரு ஸம்சயத்தைச் செய்துகொண்டிருக்கிறார்களோ, **तत्** - அதை, **नः** - எனக்கு, **ब्रूहि** - சொல்லும். [இவ்வாறு நசிகேதஸ் சொல்லிமுடித்தான். அதற்குமேல் ச்ருதி சொல்லுகிறது.] **गूढम्** - அதிஸூக்ஷ்மமாயுள்ளதை [அதாவது: முக்தாத்ம தத்வத்தை], **अनुप्रविष्टः** - அநுப்ரவேசித்திருக்கும் [அதாவது: அதி ஸூக்ஷ்மமாயுள்ள முக்தாத்ம ஸ்வரூபத்தைப்பற்றிய], **योऽयं वरः** - யாதொரு வரம் உண்டோ, **तस्मादन्यत्** - அதைக்காட்டிலும் வேறுபட்ட ஒன்றையும், **नचिकेताः** - நசிகேதஸ்ஸானவன், **न वृणीते** - வரிக்கவில்லை.

முதல் வல்லி முற்றிற்று.

श्रीः

॥ अथ द्वितीयवल्ली ॥

हरिः ओम् ।

"अन्यच्छ्रेयोऽन्यदुतैव प्रेयस्ते उभे नानार्थे पुरुषँसिनीतः ।
तयोश्श्रेय आददानस्य साधु भवति हीयतेऽर्थाद्य उ प्रेयो वृणीते ॥ १

श्रेयश्च प्रेयश्च मनुष्यमेतस्तौ संपरीत्य विविनक्ति धीरः ।
श्रेयो हि धीरोऽभिप्रेयसो वृणीते प्रेयो मन्दो योगक्षेमाद्वृणीते ॥ २

श्रीः

இரண்டாவது வல்லி

1. தர்மராஜன் நசிகேதஸ்ஸைப் பரீக்ஷித்தார்; நசிகேதஸ்ஸுக்கு மோக்ஷத்தில் ஸ்திரமான நோக்கம் இருக்கின்றது என்பது வெளிப்பட்டது; ஆகையால் அவன் உபதேசத்திற்கு அர்ஹன் என்று நிச்சயித்து, மோக்ஷம் விரும்புவதைப் புகழ்ந்து பேசுகிறார்.

[ப-ரை] **श्रेयः**—மோக்ஷ மார்க்கம், **अन्यत्** - வேறு. **प्रेयः**—போக மார்க்கம், **अन्यदेव** - வேறு. [மோக்ஷ மார்க்கமே ஶ்லாக்யம் என்பது இதன் தாத்பர்யம்.] **ते उभे** - இந்த இரண்டும், **नानार्थे [सती]** - வெவ்வேறு ப்ரயோஜநத்தை உடையவைகளாய்க் கொண்டு, **पुरुषम्** - மநுஷ்யனை, **सिनीतः** - கட்டுகின்றன [அவனைத் தம் வஶமாகச் செய்கின்றன.] **तयोः** - இந்த இரண்டுக்குள், **श्रेयः** - மோக்ஷ மார்க்கத்தை, **आददानस्य** - அவலம்பிக்கிறவனுக்கு, **साधु** - க்ஷேமமானது, **भवति** - உண்டாகின்றது, **यः** - எவன், **प्रेयः** - போக மார்க்கத்தை, **वृणीते** - வரிக்கிறானே [அவலம்பிக்கிறானே], [**सः** - அவன்] **अर्थात्** - புருஷார்த்தத்திலிருந்து [ஶாஶ்வதமான க்ஷேமத்திலிருந்து], **हीयते** - நழுவுகிறான். ['**उ**' என்பது நிஶ்சயத்தைக் காண்பிக்கிறது].

---

2. [ப-ரை] **श्रेयश्च प्रेयश्च** - மோக்ஷ மார்க்கமும் போக மார்க்கமும், **मनुष्यम्** - மநுஷ்யனை, **एतः** - அடைகின்றன [அதாவது: மநுஷ்யனால் வரிக்கக்கூடியவையாய் இருக்கின்றன]. **धीरः** - புத்திசாலியாக இருப்பவன், **तौ** - அவை இரண்டையும், **संपरीत्य** - நன்றாகப் பரீக்ஷித்துப் பார்த்து, **विविनक्ति** - பிரிக்கிறான் [அவைகளின் பரஸ்பர வைலக்ஷண்யத்தை அறிகிறான்]. **धीरः** - புத்திஶாலி, **श्रेयः** - மோக்ஷ மார்க்கத்தை, **प्रेयसः अभि** - போக மார்க்கத்தைக் காட்டிலும் ஶ்லாக்யமாக, **वृणीते** - வரிக்கிறான். **मन्दः** - புத்தி யில்லாதவன், **प्रेयः** - போக மார்க்கத்தை,

एवं प्रियान् प्रियरूपाँश्च कामानभिध्यायन्नचिकेतोऽत्यस्राक्षीः ।
नैताँ सृङ्कां वित्तमयीमवाप्तो यस्यां मज्जन्ति बहवो मनुष्याः ॥ ३

योगक्षेमात् - யோக க்ஷேமத்தை உத்தேஶித்து [ஶரீரத்தின் போஷணம் அதன் பரிபாலநம் இவைகளை உத்தேஶித்து], **वृणीते** - வரிக்கிறான்.

'**तौ**' என்பது புல்லிங்கம். 'ஶ்ரேயஸ்' 'ப்ரேயஸ்' இரண்டும் நபும்ஸக லிங்கமானதால், அவைகளைக் குறிக்கும் இந்த ஶப்தம் நபும்ஸக லிங்கமாகவே இருத்தல் வேண்டும். '**ते उभे**' என்று கீழ் மந்த்ரத்திலும் அப்படியே ப்ரயோகம் இருப்பதைப் பார்க்கலாம். ஆனால் இந்தப் புல்லிங்க ரூபத்திற்கு என்ன கதி என்றால், 'ஶ்ரேயஸ்' 'ப்ரேயஸ்' என்பவைகளை 'ஶ்ரேயஸ் என்னும் பதார்த்தம்', 'ப்ரேயஸ் என்னும் பதார்த்தம்' என்ற அர்த்தத்தில் எடுத்துக்கொண்டு புல்லிங்க ரூபம் ப்ரயோகம் செய்யப்பட்டிருக்கின்றது என்று ஸமாதாநம் சொல்ல வேண்டும். 'பதார்த்த' சப்தம் புல்லிங்கமானதால் '**तौ**' என்னும் புல் லிங்க ரூபம் ஸங்கதமாகிவிடும்.

योगक्षेमात् - இந்தப் பதம் நிவேஶிக்கப்பட்டிருக்கும் ரீதியைப் பார்த்தால் [**प्रेयसः श्रेयो वृणीते, योगक्षेमात् प्रेयो वृणीते**], 'ப்ரேயஸ:' என்னும் பஞ்சமியைப் 'போக மார்க்கத்தைக் காட்டிலும்' என்று எடுத்துக் கொண்டதுபோல, 'யோக க்ஷேமாத்' என்னும் பஞ்சமியையும் 'யோக க்ஷேமத்தைக் காட்டிலும்' என்று அர்த்தம் சொல்லவேண்டும் என்று தோன்றும். 'யோக க்ஷேமம்' என்னும் ஶப்தம் மோக்ஷ மார்க்கத்தைக் குறிக்கமாட்டாதாதலால், அந்தப் பஞ்சமிக்குக் 'காட்டிலும்' என்று அர்த்தம் செய்யாமல், '**योगक्षेमात् हेतोः**' [யோக க்ஷேமத்தை உத் தேஶித்து] என்று அர்த்தம் செய்யப்பட்டிருக்கிறது. 'யோக க்ஷேமம்' என்னும் பதத்தின் அர்த்தமாவது: '**योगः - अलब्धस्य लाभः, क्षेमः - लब्धस्य परिपालनम्**' [இது பர்யந்தம் நமக்குக் கிடைக்காமல் இருக்கும் பொருளைப் பெறுவது யோகம்; கிடைத்ததை ஸம்ரக்ஷிப்பது க்ஷேமம்] என்பது தான். இவ்விடத்தில் ஶரீர ஸம்பந்தமாக அந்த யோகக்ஷேமம் விவரிக் கப்பட்டிருக்கிறது.

---

3. [ப-ரை] **स त्वम्** - அப்படிப்பட்ட நீ, **प्रियान्** - ஸ்வபாவத் தாலேயே ப்ரியமாயும், **प्रियरूपान्** - ப்ரியம்போல் தோன்றுவனவாகவும் இருக்கும், **कामान्** - போகங்களை, **अभिध्यायन्** - நன்றாக ஆலோசித்துப் பார்த்து [இவை துக்கத்துடன் கலந்தவையாகவும் துக்கத்திலேயே முடியுமவையாகவும் இருக்கின்றன என்பதை உணர்ந்து], **हे नचिकेतः** - ஹே நசிகேதஸ்ஸே! **अत्यस्राक्षीः** - த்யஜித்து விட்டாய். **वित्तमयीं** - தந ரூபமாயுள்ளதும், **सृङ्काम्** - கேட்டை விளைவிக்குமதான, **एताम्** - இதை [இந்தக் காம போகத்தை], **न अवाप्तः** - நீ அடையவில்லை [வேண்டா மென்று த்யஜித்துவிட்டாய்]. **यस्याम्** - எதில் [எந்தத் தந ரூபமான

दूरमेते विपरीते विषूची अविद्या या च विद्येति ज्ञाता ।
विद्याभीप्सिनं नचिकेतसं मन्ये न त्वा कामा बहवो लोलुपन्त ॥ ४

अविद्यायामन्तरे वर्तमानाः स्वयं धीराः पण्डितंमन्यमानाः ।
दन्द्रम्यमाणाः परियन्ति मूढा अन्धेनैव नीयमाना यथान्धाः ॥ ५

न सांपरायः प्रतिभाति बालं प्रमाद्यन्तं वित्तमोहेन मूढम् ।
अयं लोको नास्ति पर इति मानी पुनः पुनर्वशमापद्यते मे ॥ ६

போகத்தில், **बहवो मनुष्याः** - அநேக மநுஷ்யர்கள் [அநேக மூடர்கள்] **मज्जन्ति** - மூழ்கிவிடுகிறார்களோ.

4. [ப-ரை], **या** - எது, **अविद्येति** - கர்ம ரூபமென்று [அதாவது: போகங்களை உத்தேசித்துச் செய்யப்படும் கர்ம ரூபமானதென்று], **ज्ञाता** - [ஜகத்தில்] ப்ரஸித்தமா யிருக்கிறதோ, **या च** - எது, **विद्येति** - தத்வ ஜ்ஞாந ரூபமென்று [**ज्ञाता** - ப்ரஸித்தமோ], **एते** - இவை [இரண்டும்], **दूरं विषूची** - மிகவும் வேறுபட்டிருக்கும் [மார்க்கங்கள்]; **विपरीते [च]** - பரஸ்பரம் விருத்தங்கள். **नचिकेतसं त्वा** - நசிகேதஸ்ஸாகிற உன்னை, **विद्याभीप्सिनम्** - வித்யை என்னும் [தத்வஜ்ஞாந] மார்க்கத்தை விரும்புமவனாக, **मन्ये** - எண்ணுகிறேன். [ஏனென்றால் **त्वा** - உன்னை], **बहवः कामाः** - அநேக காமங்கள் [மிகவும் ப்ரியமாயுள்ள போகங்கள்கூட], **न लोलुपन्त** - [ஶ்ரேயஸ் என்னும் மார்க்கத்திலிருந்து] திருப்பவில்லை.

---

5. வித்யை என்றும் அவித்யை என்றும் கூறப்பட்டுள்ள இரண்டு மார்க்கங்களுள், அவித்யை யென்னும் கர்ம மார்க்கத்தில் ப்ரவர்த்திப்பவர்களை நிந்திக்கிறார்.

[ப-ரை] **अविद्यायाम्** - அவித்யை என்னும் கர்ம மார்க்கத்தில், **अन्तरे** - [அதன்] நடுவில் [அதாவது: அதில் மூழ்கினவர்களாக], **वर्तमानाः** - இருந்துகொண்டும் [உழன்றுகொண்டும்], **स्वयं धीराः [मन्यमानाः]** - ஸ்வயம் புத்திசாலிகளென்று [தம்மை நினைத்துக்கொண்டும்], **पण्डितंमन्यमानाः** - தாமே பண்டிதர்களென்று நினைத்துக்கொண்டும், **दन्द्रम्यमाणाः** - [பலவித துக்கங்களால்] பீடிதர்களாய், **मूढाः** - விவேக மற்று, **अन्धेनैव नीयमाना अन्धा यथा** - குருடர்களால் நயிப்பிக்கப்படும் குருடர்கள்போல, **परियन्ति** - [ப்ரமித்துச்] சுற்றிச் சுற்றி அலைகிறார்கள்.

'**दन्द्रह्यमाणाः**' என்றும் பாடமுண்டு. அப்பொழுது '[காமமாகிற அக்நியால்] உருக்கப்பட்ட சித்தத்தை உடையவர்களாக' என்று பொருள் கொள்ளவேண்டும்.

---

6. [ப-ரை] **प्रमाद्यन्तम्** - அடங்காமலிருக்கும் மநஸ்ஸை உடையவனாகவும், **वित्तमोहेन मूढम्** - தந மோஹத்தால் நல்லது தீயது

श्रवणायापि बहुभिर्यो न लभ्यः शृण्वन्तोऽपि बहवो यन्न विद्युः।
आश्चर्यो वक्ता कुशलोऽस्य लब्धा आश्चर्यो ज्ञाता कुशलानुशिष्टः ॥ ७

அறியாதவனுகவும் இருக்கிற, **बालम्** - விவேகமற்றவனுக்கு, **सांपरायः** - பரலோகத்தை ஸாதித்துக் கொடுக்கும் வ்யாபாரமானது, **न प्रतिभाति** - ப்ரகாசிக்கிறதில்லை. '**अयं लोकः** - இந்த லோகம்தான் [இருக்கிறது]; **परो नास्ति** - பரலோக மென்று ஒன்றுமில்லை' **इति** - இவ்வாருக, **मानी** - எண்ணிக்கொண்டு, **पुनः पुनः** - திரும்பத் திரும்ப, **मे** - என்னுடைய, **वशम्** - வசத்தை, **आपद्यते** - அடைகிருன். [அதாவது: என்னுல் விதிக்கப்படும் யாதனைகளுக்கு விஷயமாகிருன்].

---

7. [ப - ரை]. **यः** - [ஶாஸ்த்ரங்களில் ப்ரஸித்தனுக இருக்கிற] எவன், **बहुभिः** - அநேகரால், **श्रवणायापि न लभ्यः** - கேட்பதற்குக்கூட ஸுலபனன்ருே? [அவனைப்பற்றிக் கேட்பதும் மஹத்தான ஸுக்ருதம் செய்திருப்பவர்களுக்கே லபிக்கும் என்பது கருத்து]. **शृण्वन्तोऽपि बहवः** - கேட்கும் பாக்யம் பெற்றவர்களுள் அநேகர், **यम्** - எவனை, **न विद्युः** - [உள்ளபடி அறிகிருர்களில்லையோ], **अस्य** - அப்படிப்பட்ட இவனுடைய [இந்தப் பரமாத்மாவின்], **कुशलो वक्ता** - உள்ளபடி சொல்லுகிறவனும், **कुशलो लब्धा च** - உள்ளபடி அடைகிறவனும், **आश्चर्यः** - ஆஶ்சர்யகரமானவனே [அதாவது: அப்படிப்பட்டவன் மிகவும் துர்லபனே]. **कुशलानुशिष्टः** - ஸமர்த்தனுன ஆசார்யனிடமிருந்து உபதேசம் பெற்ற, **ज्ञाता** - அவனை உள்ளபடி உணர்ந்தவனும், **आश्चर्यः** - துர்லபனே.

'ப்ராக்ருத விஷய ஸுகங்களின் அநுபவத்திலேயே ப்ராயேண மநுஷ்யர்க ளெல்லாரும் நோக்கமுள்ளவர்களாக இருக்கிருர்கள்; பகவத் விஷயத்தில் நோக்கமுள்ளவர்கள் மிகவும் துர்லபர்களே' என்னும் பொருளை இந்த மந்த்ரம் வெளியிடுகின்றது. இந்தப் பொருளை இதன் உபப்ருஹ்மணமாக இருக்கும் பகவத் கீதா ஶ்லோகம் நன்கு விளக்குகின்றது. [7-வது அத்யாயம் மூன்ருவது ஶ்லோகம்.]

"मनुष्याणां सहस्रेषु कश्चिद्यतति सिद्धये।
यततामपि सिद्धानां कश्चिन्मां वेत्ति तत्त्वतः॥"

[ஶாஸ்த்ராதிகாரத்திற்கு யோக்யரா யிருக்கும் ப்ரஜைகளுள் அநேகம் பெயர்கள் ஸித்திக்காக ப்ரயத்நம் செய்தபோதிலும், ஸித்திகைக்குக் கிடைக்கும் பர்யந்தம் விடாமுயற்சியுடன் ப்ரயத்நம் செய்பவர் துர்லபர்; அப்படி ஸித்திபர்யந்தம் யத்நம் செய்பவர் சிலர் உண்டேயாயினும், 'இந்த ஸித்தி பரமாத்மாவிடமிருந்தே கிடைக்கவேண்டும்' என்னும் ஜ்ஞாநத்துடன் யத்நம் செய்பவர்கள் மிகவும் துர்லபர்; அப்படிப்பட்ட ஜ்ஞாநமுடையவர்கள் சிலர் உண்டேயாயினும், பரமாத்

न नरेणावरेण प्रोक्त एष सुविज्ञेयो बहुधा चिन्त्यमानः ।
अनन्यप्रोक्ते गतिरत्र नास्ति अणीयान् ह्यतर्क्यमणुप्रमाणात् ॥ ८

மாவை '**वासुदेवस्सर्वमिति**' என்று சொல்லுகிறவர் யதாவஸ்திதமாக அறிபவர்கள் இன்னும் துர்லபர்; '**स महात्मा सुदुर्लभः**' என்றன்றோ சொல்லப்பட்டிருக்கிறது?]

இந்த ஶ்லோகம் ப்ரஸ்துத மந்த்ரத்தின் விவரணமாக இருப்பதால், இதில் ப்ரஸ்தாவிக்கப்பட்டுள்ள மூன்று வகுப்பினரே இந்த மந்த்ரத்திலும் விவக்ஷிக்கப்படுகிறார்கள் என்று அறிதல் வேண்டும்.

8. [ப-ரை] **एषः** - இந்தப் பரமாத்மா, **अवरेण नरेण** - ப்ராக்ருதனை மநுஷ்யனால் [அதாவது: கேவலம் பாண்டித்யத்தை மாத்ரம் உத்தேஶித்து எவன் வேதாந்த ஶ்ரவணம் செய்திருக்கிறானோ அவனால்], **प्रोक्तः** - விவரிக்கப்பட்டவனாய்க் கொண்டு [அதாவது: விவரிக்கப்படும் பக்ஷத்தில்], **न सुविज्ञेयः** - நன்றாக அறியப்பட்டவனாக மாட்டான். [ஏனென்றால், **सः** - அவன்] **बहुधा** - [பற்பல வாதிகளால்] பற்பல விதமாக, **चिन्त्यमानः** - சிந்திக்கப்பட்டிருக்கிறானன்றோ? [அதாவது: ப்ரஹ்மாத்ம ஸாக்ஷாத்காரத்தை எவன் பெற்றிருக்கிறானோ, அவனுடைய உபதேஶமே ப்ரயோஜநவத்தாகும் என்பது கருத்து]. **अनन्यप्रोक्ते गतिः अत्र नास्ति [अनन्यप्रोक्ते या अवगतिः संभवति सा अत्र नास्ति]** - பகவானிடத்தில் ஏகாந்த புத்தியுடன் அவனுடைய ஸாக்ஷாத்காரம் பெற்றவனால் உபதேசிக்கப்பட்டால் எவ்வித பகவத்ஜ்ஞாநம் உண்டாகின்றதோ, அப்படிப்பட்ட ஜ்ஞாநம் கேவல பண்டிதனுடைய உபதேஶத்தால் கிடைக்கப்படமாட்டாது. **अणीयान् हि [सः]** - அவன் அதி ஸூக்ஷ்மமான ஸ்வரூபத்தை உடையவனன்றோ? **अणुप्रमाणात्** -[அவனுடைய ஸ்வரூபம்] அதி ஸூக்ஷ்மமானதால், **अतर्क्यम्** - [அது] கேவல தர்க்கத்திற்கு எட்டமாட்டாது.

இந்த மந்த்ரத்தில் '**अनन्य**' என்னும் பதத்திற்கு 'ப்ரஸ்தாவிக்கப்படும் பரமாத்மாவைக் காட்டிலும் வேறுபடாமலுள்ள' என்பது பொருள். அதாவது: 'ப்ரஹ்ம ஸாக்ஷாத்காரம் பெற்றுள்ள பரமைகாந்திகள்' என்பது தாத்பர்யம். மற்றும் ஒரு பொருள்- சொல்லக்கூடும். **अनन्यप्रोक्ते** - 'மற்றவர்களிடமிருந்து ஶ்ரவணம் செய்யாமல் ஸ்வயமே புஸ்தகம் பார்த்துத் தெரிந்துகொண்டால்' என்பதுதான் அந்தப் பொருள். '**अन्यप्रोक्ते**' என்றும் ஒரு பாடம் உண்டு. அப்பொழுது 'கேவல பண்டிதனை ஸாமாந்ய மநுஷ்யனால் உபதேஶிக்கப்படும் பக்ஷத்தில்' என்பது பொருள். அப்பொழுது '**अत्र**' என்பதற்கு 'ஆத்மாவை அறியும் விஷயத்தில்' என்று பொருள்கொள்ள வேண்டும். முந்தின பாடத்தில், '**अत्र**' என்பது கேவல பண்டிதனுடைய உபதேஶத்தைக் குறிக்கின்றது.

नैषा तर्केण मतिरापनेया प्रोक्ताऽन्येनैव सुज्ञानाय प्रेष्ठ ।
यान्त्वमापः सत्यधृतिर्बतासि त्वादृङ्नो भूयान्नचिकेतः प्रष्टा ॥ ९

जानाम्यहँ शेवधिरित्यनित्यं न ह्यध्रुवैः प्राप्यते हि ध्रुवं तत् ।
ततो मया नचिकेतश्चितोऽग्निरनित्यैर्द्रव्यैः प्राप्तवानस्मि नित्यम् ॥ १०

---

9. கீழ்ச் சொல்லப்பட்ட விஷயமே மறுபடியும் விவரிக்கப் படுகின்றது.

[ப-ரை] **एषा** - பரமாத்மாவைப் பற்றிய ஜ்ஞாநம், **तर्केण** - கேவல தர்க்கத்தால் [அதாவது: குருவின் உபதேசமின்றிக்கே கேவலம் தனது புத்தியைக்கொண்டு ஊஹாபோஹம் செய்வதால்], **न आपनेया** - அடையத் தகுந்ததன்று. **प्रेष्ठ** - ஹே ப்ரியதமனே, **अन्येनैव** - தன்னைக் காட்டிலும் வேறுபட்ட குரு முதலானவர்களால், **प्रोक्ता** - உபதேசிக்கப்பட்ட புத்தியே, **सुज्ञानाय** - நல்ல ஜ்ஞாநத்தின் பொருட்டு [அதாவது: பரமாத்ம ஸாக்ஷாத்காரத்தை ஸாதித்துக் கொடுக்கும் பொருட்டு], **भवति** - ஆகும். [அந்த புத்தி எது வென்றால்] **याम्** - எதை **त्वम्** - நீ, **आपः** - அடைந்திருக்கிறாயோ, [அதுதான் மோக்ஷ ஸாதநமாகும்]. **सत्यधृतिरसि** - [நீ] சலிப்பிக்கக் கூடாத உறுதியை உடைத்தாயிருக்கிறாய்; **बत** - ஆச்சர்யம். **नचिकेतः** - ஹே நசிகேதஸ்ஸே! **त्वादृक्** - உன்னைப் போன்ற, **प्रष्टा** - சிஷ்யன், **नः** - எங்களுக்கு, **भूयात्** - உண்டாக வேண்டும்.

---

10. 'ப்ரஹ்ம ப்ராப்தியானது அநித்ய பல ஸாதகங்களான கர்மங்களால் கிடைக்கமாட்டாது; அது ஜ்ஞாநத்தால் மாத்ரம் கிடைக்கப்படும்' என்பது வேதாந்தத்தால் சொல்லப்படுகின்றது. அப்படி இருக்கையில், கர்மமாகிய நாசிகேத அக்நி சயநத்தால் ப்ரயோஜநமென்ன? என்று ஒரு கேள்வி பிறக்கும். அது இந்த மந்த்ரத்தால் விளக்கப்படுகின்றது. ப்ரஹ்ம ஜ்ஞாநத்தாலேயே மோக்ஷ ப்ராப்தி என்பது உண்மையே; அந்த மோக்ஷ ஜ்ஞாநத்திற்கு ஸாதநம் இந்த அக்நி சயந ரூபமாகிற கர்மம் என்பது கருத்து.

[ப-ரை] **शेवधिः** - ஐஸ்வர்யமானது, **अनित्यमिति** - நித்யமானதன்று என்று, **अहम्** - நான், **जानामि** - அறிவேன். **ध्रुवम् तत्** - நித்யமாக இருக்கும் ஆத்ம தத்வம், **अध्रुवैः** - அநித்யமாயிருக்குமவைகளால் [அநித்யங்களான த்ரவ்யங்களைக் கொண்டு செய்யப்படும் கர்மங்களால்], **न प्राप्यते हि** - அடையப்படுகிறதில்லை யன்றோ? **ततः** - ஆகையால் [இந்த அறிவு இருந்தபடியால்] **मया** - என்னால், **नाचिकेतः अग्निः चितः** - 'நசிகேதஸ்' என்னும் பெயருடன் வழங்கப்படும் அக்நி சயந ரூபமான கர்மமானது அநுஷ்டிக்கப்பட்டது. [அதாவது: இந்தக்

2/10/13

कामस्याप्तिं जगतः प्रतिष्ठां क्रतोरानन्त्यमभयस्य पारम् ।
स्तोमं महदुरुगायं प्रतिष्ठां दृष्ट्वा धीरो नचिकेतोऽत्यस्राक्षीः ॥ ११

கர்மம் மோக்ஷ ஸாதநமாகமாட்டாது என்பதைத் தெரிந்துகொண்டே, நான், ப்ரஹ்ம ப்ராப்திக்கு ஸாதநமாயிருக்கும் ப்ரஹ்ம ஜ்ஞாநத்தைப் பெறும்பொருட்டு இந்த அக்நி சயநத்தைச் செய்தேன். இந்தக் கர்மம் ஜ்ஞாநத்தைக் கொடுத்தது; அந்த ஜ்ஞாநம் ப்ரஹ்ம ப்ராப்திக்குக் காரணம்' என்பது தாத்பர்யம்]. இவ்வாறு, **अनित्यैर्द्रव्यैः** - அநித்யங்களான [இஷ்டகை முதலான] த்ரவ்யங்களால், **नित्यम्** - நித்ய பலத்திற்கு ஸாதநமான ஜ்ஞாநத்தை, **प्राप्तवानस्मि** - அடைந்தவனாகிறேன்.

இந்த மந்த்ரத்தில், முதலில் 'அத்ருவங்களால் த்ருவமானது அடையப்பட மாட்டாது' என்றும், அடுத்து வரும் வாக்யத்தில் 'அநித்யங்களான த்ரவ்யங்களால் நித்யத்தை அடைந்தேன்' என்றும் சொல்லப்பட்டிருப்பதைப் பார்க்கும்பொழுது பூர்வாபர விரோதம் இருப்பது போலத் தோன்றும். இவ்விடத்திற் சொல்லப்படும் விஷயமானது 'கேவல கர்மங்கள் மோக்ஷத்திற்கு ஸாதநமாகமாட்டா' என்பதே. அதுதான் முதல் வாக்யத்தின் அர்த்தம். இரண்டாவது வாக்யத்தின் கருத்து 'அநித்யங்களான கர்மங்களால் நித்யமான மோக்ஷத்தை அடைந்தேன்' என்பது அன்று; 'அநித்யங்களான கர்மங்களால் மோக்ஷத்திற்கு ஸாக்ஷாத் ஸாதநமான ஆத்ம ஜ்ஞாநத்தைப் பெற்றேன்' என்பதுதான் அதன் தாத்பர்யம். ஆகையால் எவ்வித விரோதமும் இல்லை. ஆத்ம ஜ்ஞாநம் நித்யமான வஸ்துவானதால், அது நித்யமென்று வ்யவஹரிக்கப்படுகின்றது.

---

11. '**तादृक् प्रष्टा नः भूयात्**' [அப்படிப்பட்ட ஶிஷ்யனே எனக்கு வேண்டும்] என்று 9-வது மந்த்ரத்தில் நசிகேதஸ் புகழ்ந்து பேசப் பட்டானன்றோ? அப்படிப் புகழப்படுவதற்கு அவனிடம் என்ன குண விசேஷம் இருக்கின்றது என்பது இந்த மந்த்ரத்தால் விளக்கப்படுகின்றது.

[ப-ரை] **जगतः कामस्य आप्तिम्** இந்த ஜகத்தில் கிடைக்கக்கூடிய [சதுர்முக ப்ரஹ்ம ஐஶ்வர்யம் பர்யந்தமான] போக ப்ராப்தியை, **क्रतोः प्रतिष्ठाम्** - கர்மங்களின் பலமென்றும், **आनन्त्यम्** - எல்லையற்றிருக்கும் தன்மை, **अभयस्य पारम्** - நிர்ப்பயமாக இருப்பது, **महत् स्तोमम्**-உயர்ந்த கல்யாண குணங்களின் கூட்டம், **उरुगायम्** - அளவற்ற கீர்த்தி [இவைகளை], [**विद्यायाः**]**प्रतिष्ठाम्** - [மோக்ஷ மார்க்கத்தின்] பலமென்றும், **दृष्ट्वा**- பார்த்து [அதாவது: அறிந்துகொண்டு], **नचिकेत** :-ஹே நசிகேதஸ்ஸே! **धीरः** [**त्वम्**] - ப்ரஜ்ஞாஶாலியாயிருக்கும் நீ, **धृत्या**-உறுதியுடன், **अत्यस्राक्षीः** :—விட்டுவிட்டாயன்றோ?

[stamp]

ஸ்ரீ:

சந்தா செலுத்தினவர்களின் பெயர்

1—4—'43 to *30—4—'43*

[மற்றவர்களும் க்ருபை செய்து சீக்ரத்தில் சந்தாவைச் செலுத்த வேண்டுமென்று ப்ரார்த்திக்கிறோம்.]

	For 1943.		Rs.	A.
1.	Sri A. Narasimhachariar, C/o M. V. Ramaswami Iyengar, 1st Floor, Viswesbhuvan, Deodar Road, Matunga, G.I.P.	...	3	0
2.	,, V. K. Panthulu, C/o Sri N. G. Ranga Rao, P. P. M's Office, G. P. O., Bombay	...	3	0
3.	,, Nedunthurai S. Veeraraghava Iyengar, Postmaster, Ayyampet, Tanjore District.	...	3	0
4.	,, C. Manavala Perumal Reddy, 17 Pudupet Street, Alandur, Mount	...	3	0
5.	,, T. Todadri Iyengar, M.A., Professor of Mathematics, 1. Bertram Buildings, Teppakulam P. O., Trichy	...	3	0
6.	,, Sesha Iyengar, Planner, Planning Office, Golden Rock	...	3	0
7.	,, T. P. Rajagopala Iyengar, F 57/6 Golden Rock	...	3	0
8.	,, C. Krishnaswami Iyengar, Rtd. Tahsildar, South Extension, Royar Gopuram, Srirangam	...	3	0
9.	,, A. V. Gopalachariar, Advocate, Cantonment, Trichy	...	3	0
10.	,, S. V. Venugopalachariar, Advocate, 'Govardhanam,' Mylapore	...	3	0
11.	,, D. P. Chellam Iyengar, Representatlve, I.C. India Ltd.,	...	3	0
12.	,, T. K. Sundaram Iyengar, 43 Anakatti Street, Little Conjeevaram	...	3	0
13.	,, Raghunathathathachariar, 3rd Puthan Street, Trivandrum	...	3	0
14.	,, K. R. Srinivasan, Ground floor, 4-A, Bombas Road, Rash Behari Avenue Post, Calcutta	...	3	0
15.	,, T. Krishnaswami Iyengar, Vakil, Goods Shed Street, Madura	...	3	0

	For 1942.			
1.	Sri K. V. Rangaswami Iyengar, Head Clerk, Telephone Company, Mangadusami Iyer Street, Nungambakkam	...	3	0
2.	,, T. K. Sundaram Iyengar, 3, Anakatti Street, Little Conjeevaram	...	3	0
3.	,, Gopalachariar, Clerk, District Engineer's Office, Krishnarajapuram, Madura	...	1	0

(இந்த ஸஞ்சிகையுடன் பதினேழு ஸஞ்சிகைகள் வெளியாகி இருக்கின்றன. 1942-வது வருஷத்திய சந்தாவைச் செலுத்தாதவர்களுக்கு ஸஞ்சிகை அனுப்பப்பட மாட்டாது)

Regd. No. M. **4437**

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ அஹோபில மடத்தில் அச்சிடப் பெற்ற கீழ்க்கண்ட புத்தகங்கள் 'ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா' ஆபீஸில் **விற்பனைக்கு தயாராயிருக்கின்றன**

	சந்தாதாரர்கள் ரூ. அ. பை	மற்றவர்கள் ரூ. அ. பை
1. அதிகரண ஸாராவளி (தேவநாகர லிபி) [சிந்தாமணி, கல்பதரு வ்யாக்யானத்துடன் காலிகோ பயிண்ட் செய்தது]	5—0—0	6—0—0
2. ஷை (பைண்டில்லாதது) ...	4—0—0	5—0—0
3. உக்தி நிஷ்டாபரணம் ந்யாஸ நிஷ்டா மீமாம்ஸா ச (க்ரந்த லிபி)	0—6—0	0—8—0
4. உக்திநிஷ்டாபரணோத்யோதம் (,,)	0—4—0	0—6 —0
5. வீக்ஷாரண்ய க்ஷேத்ர மாஹாத்ம்யம் மணிப்ரவாள வ்யாக்யானம் .. (க்ரந்த லிபி)	0-12—0	1—0—0
6. ஸ்ரீ அஹோபில மாஹாத்ம்யம் (,,)	0—4—0	0—6—0
7. ஷை (தெலுங்கு லிபி)	0—6—0	0—8—0
8. ந்யாஸ நிர்ணயம் (க்ரந்த லிபி) ...	0—3—0	0—4—6
9. ஸ்ரீ வீரராகவஸ்வாமி ஸுப்ரபாதம் (க்ரந்த லிபி)	0—2—6	0—3—0
வேறு இடங்களிலச்சிடப் பெற்றவை		
1. மீமாம்ஸாபாதுகை ... ... (பரித்ராணத்துடன் க்ரந்த லிபி)	0—8—0	0-10—0
2. ஸமுத்ரயாந தோஷ நிர்ணயம், விதவா விவாஹ கண்டனம் (நாகர லிபி) ...	0—4—0	0—6—0
3. தத்வத்ரய நிரூபணம் (க்ரந்த லிபி) ...	0—3—0	0—4—0

(தபால் சிலவு வேறு)

வேண்டுபவர்கள் கீழுள்ள விலாஸத்திற்கு எழுதவும் :—

மானேஜர், **ந்ருஸிம்ஹ ப்ரியா ஆபீஸ்,**

23—4—'43.] நெ. 5, ராமஸ்வாமி தெருவு, தி. நகர், சென்னை.

N.B. மேல்படி விலைகள் இன்று முதல் 3 மாதத்திற்கு மட்டுமே குறைவாக ஏற்பட்டிருக்கிறது.

Printed by K. Sadagopachariar, at the Liberty Press, 10, Linghi Chetty Street, G. T., Madras.
Edited & Published by S. Vasudevachariar, 5, Ramasami Street, Tyagarayanagar, Madras.